உ

கடவுள் துணை.

4226.

அகஸ்திய மகாமுனிவர்

# செந்தூரம் 300.

இஃது

திருவாவடுதுறை

சண்முகதேசிகரால்

பரிசோதிக்கப்பட்டு,

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1934. [அணா 8.

4226

உ
கடவுள் துணை.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

# செந்தூரம் முந்நூறு.

காலுந்தலையுங் கலந்துகடுவாகிநின்று
மேலுந்துரியம் விளங்குமே - காலாம்
வயித்தியமுந்நூறும் வழங்கவேசூத்திரம்
பயிற்றுங்கணேசனருட் பார்.

## காப்பு.

பூதலத்தில் தென்பொதிகை தன்னில்வாழும்
பூரணமே யென்குருவே சிவமேஐயா
மாதவத்தால் அஷ்டசித்தி யெட்டும்பெற்ற
வரிசையிலே வயித்தியநூல் வகையாய்ச்சொல்வேன்
போதகத்தின் முகத்தானைக் கடைக்கோட்டானை
புழுக்குழியில் விழுந்தானைப் புதல்வன்றன்னை
சாதகமாய் மனமடங்கி யறிவிற்கூடி
தற்பரனாய் நின்ற கணபதிகாப்பாமே 1

## நூல்.

கணபதியின் பதத்தாலே இழ்முக்கோணங்
கரையடங்காப் பிறப்பறுப்பான் கடவுளானு
கணபதியைக் குண்டலியிற் கண்டுதேறி
கனலெழுந்து வாய்வுவந்த புரியஷ்டத்தால்
கணபதியே பிறப்பிறப்பு ஆண்பெண்ணாகிக்
கரைகொள்ளா நாதமொடு விந்துவாகி
கணபதியைப் பெற்றெடுத்தவிந்துவாலே
கழறுகின்ற விருகுறியுங் காணுகாணே 2

காணப்பா புரியஷ்ட மெட்டிஞேடு
கலந்துதப்பா பூரணந்தான் கண்டத்தோடே
தோணப்பா யிடகலேக்குச் சோடசமேபாயுஞ்
சுகமாகப் பின்கலேக்குப் பன்னிரண்டாம்
பேணப்பா இதில்விட்ட குறையினுலே
பெண்ணேடு புருஷனங்கே சேரும்போது
ஊனப்பா பிரனவங்கொண் டுயர்ந்தசென்மம்
உத்தமனே யிதிற்பிறந்த நோய்கள்தானே.

தானென்ற சபையெழுத்து தொண்ணூற்ருறும்
தத்துவமா மிவர்களுக்குப் பஞ்சகர்த்தாள்
தானென்றே கொண்டணக்குந் தசமாம்வாய்வு
சாதகமா யபானனுட தத்துவந்தான்
தானென்று நின்றவிடம் வாதபித்தஞ்
சார்ந்த சிலேற்பனத்தோடு மூன்றினுலே
தானென்ற வியாதியெல்லாம் வளருமப்பா
சடலமெல்லாம் நோயிட்ட கூடுதானே.

கூடுகட்டிக் குடியிருந்த குறும்பரேகேள்
கொள்ளையிட்டார் கற்பமெல்லாங் கூறுய்த்தின்ன
நாடுமப்போ தொன்றேடே யொன்றுவேறுய்
நடைகொடுக்க மாட்டாமல் கற்பந்தின்றுல்
தேடுமப்போ சிவயோகஞ் செய்யவேணும்
தெளிவாக வாதசித்தி காணவேணும்
ஆடுமப்போ காயசித்தி பண்ணும்போது
அதற்குமுன்னே யயமிருத்து தட்டுறேனே.

தட்டுறே னென்பதற்குக் கற்பங்கேளு
சாதகமாய் காந்தமது பலந்தானஞ்சி
தெட்டிறதோர் வெள்ளையது பலந்தானென்று
திரமாகக் கரமொடு பலந்தானென்று
ஒட்டிறதோர் சாரமது பலந்தானென்று
உத்தமனே தாளகந்தான் பலந்தானென்று
பட்டிடவே பூரீறு கழஞ்சியொன்று
பாங்கான வெண்கருவெள் ளெரு

வார்த்துவைக்கச் சலமாகும் சலத்தைவிட்டு
மாட்டுவாய் பதினொன்று மருந்துங்கூட்டி
சேர்த்துநீ யரைத்திடுவாய் ரெண்டுசாமந்
திரமாகப் பின்பதனை வில்லைசெய்து
போர்த்திடுவாய் வெய்யிலிலே உலர்ந்தபின்பு
புகழான மூசையிலே யிட்டுமூடி
காத்திடுவாய் மேலோடு கொண்டுமூடிக்
கைமுறையாய் சீலைமண் கணக்காய்ச்செய்யே. 7

செய்யப்பா உலைமுகத்தில் தருத்திரெண்டு
திரமாக ஊதிவிடு அழுகுமட்டும்
பையப்பா வெடுத்ததனை யாறவைத்து
பாங்காகப் பின்பொருக்க லழுகவூது
மெய்யப்பா பின்பதனைக் குகையில்வைத்து
விளங்கவே பின்பொருக்கால் நன்றாயூது
அய்யப்பா காந்தமது ராப்போல்நிற்கும்
ஆஆஆ காந்தமது அருமைதானே. 8

அருமையென்ற காந்தத்தைக் குகையில்வைத்து
அப்பனே மூன்றுதரம் அழுகவூதிற்
பெருமையென்ற காந்தமது சத்தாய்ப்போகும்
பேச்சுது சூதமொரு பலத்தைத்தாக்கி
கருமையென்ற காந்தமது சோதித்தேறக்
கருவளையல் வீரமுடன் காரங்கூடி
யுருமையென்ற சாரமது பழச்சாற்றாலாட்டி
யுலர்த்துவாய்ப் பணம்போலே வில்லைசெய்தே. 9

வில்லைசெய் மருந்தெல்லாம் சமனாய்க்கொண்டு
மீறியதோர் காந்தமது உருகும்போது
சொல்லுவேன் சத்துக்குச் சமனாய்த்தாக்கு
துடியாக வொவ்வொன்றாய் கொடுக்கவாங்கும்
அல்லவே சமனாகத் தாக்கிப்பின்பு
அப்பனே ஓடுகொண்டு மூடிக்கொண்டு
வல்லதொரு குகையழுக நன்றாயூது
மகத்தான காந்தமது வங்கந்தானே. 10

தானென்ற காந்தமது ஈயமாகச்
சாஸ்திர மெல்லாபடித்தா ரருமையென்றே
நானென்ற அனுபவத்தால் வெளியிற்போட்டேன்
நாட்டாதே கள்ளரென்ற பிள்ளைக்கெல்லாம்
வானென்ற ஈயத்தைப் பதனம்பண்ணு
வண்மையாய் தேவியுட நாதங்கேளு
வேனென்ற அயப்பொடிதான் பலந்தானஞ்சு
வெள்ளையொடு தாளகமுஞ் சூதங்கூட்டே. 11

கூட்டியே சாரமொடு காரந்தன்னைக்
குறியாக வதக்கியொரு பலந்தான்பாரு
மூட்டுவாய் பூநீறு கழஞ்சியொன்று
முந்தியதோர் வெண்கருவு நீராலாட்டி
மாட்டுவா யிருசாமம் அரைத்தபின்பு
வளமாக வில்லைசெய்து வெயிலிற்போட்டு
நாட்டுவா யுலர்ந்தபின்பு மூசைக்குள்ளே
நயமாக வைத்ததனைக் குகைவாய்மூடே. 12

மூடப்பா வோடுகொண்டு சீலைசெய்து
முன்போலே யுருக்கியெடு வெண்கலமாய்நிற்குந்
தேடப்பா முன்போலே சோதித்தேறு
செகமெல்லா மிரும்பினுட ஈயங்காணும்
ஆடப்பா யிதனுட்டுச் சித்தாட்டு
ஆஆஆ நாகமதில் கூடிற்றானல்
வீடப்பா பிலத்துதடா பிறவியேது
மிதமிஞ்சு மென்றுசித்தர் மறைத்திட்டாரே. 13

மறைத்திட்டார் அயத்தினொடு காந்தந்தன்னை
மக்களே யயமிருத்துத் தட்டுமென்று
குறைத்திட்டா ரறுசுவையுங் கழற்றுமுன்பே
கொள்வதற்கு முதல்கற்ப மென்றுகூறுர்
நிறைத்திட்டே னுலகமெல்லாம் சித்தாய்போக
நிலையான ஆறுவரையுறுதி சொன்னேன்
முறைத்திட்டந் தப்பாமல் கற்பமேற
முந்தவே யயக்காந்த மொழிந்திட்டேனே. 14

மொழிந்ததொரு அயக்காந்தம் பலந்தானொன்று
முத்தமிழ்தேர் புலத்தியனே வகையொன்றுக்குத்
தெளிந்ததொரு தங்கமது பலந்தான்ரெண்டு
சேரவே மூன்றுமொன்றா யுருக்கியாட்டு
கொளுந்ததொரு கல்வத்தில் பொடியாய்ச்செய்து
கூட்டப்பா கண்டிடைக்குச் சவ்வீரத்தை
வளிந்ததொரு ரசமதிலே பனியிற்போட்டு
மாட்டடா தங்கைவிடை சூதந்தானே. 15

சூதமுறை வாலைதன்னை நாள்மூன்றிற்றான்
சுறுக்காக நித்தியமொரு சாமமாட்டி
காதமுற முலைப்பாலி லாட்டுஆட்டு
ராப்பனியிற் போட்டுவிடு மூன்றுநாளாய்
வாதமுமோ வேதையிடும் வாதிக்கல்லோ
வயித்தியத்தில் வாலைரசமார்க்கஞ் சொன்னேன்
வேதையிதி லோடாது ஆசியாதே
வேதைக்குக் குருவேறே விளம்பக்கேளே. 16

விளம்புவேன் வாலைரசங் கண்டிடைக்குரெட்டி
மீறியதோர் கெந்தியிடு சீலைபத்தொன்று
வளம்பெறவே பொற்றலையின் சாற்றலாட்டி
வாசமா யிரண்டுநா ளரைத்தபின்பு
உளம்பிலக்கக் குப்பியிலே யுலர்த்தியிட்டு
உத்தமனே வாலுகையில் தீயைமூட்டு
தளம்பெறவே மூன்றுநாள் முத்தீயிட்டு
தப்பாது தளமுறு செந்தூரமாமே. 17

செந்தூரஞ் செகப்பென்ன முருக்கம்பூவோ
தேகத்துக் கழிவேது வயிரவனைப்பூச்சி
செந்தூர் மெடுத்தடக்கிச் சிவனைப்பூசி
தேவியொடு கணபதிக்குப் பூசைபண்ணி
செந்தூரந் தின்பதற்குத் திட்சைக்குள்ளே
செயமாகக் கிரகலெக்கினமுஞ் சொன்னேன்
செந்தூரங் குன்றியிடை மூதண்டத்தின்
திரமான லேகியத்திற் பொதிந்துதின்னே. 18

திண்ணவே லேகியந்தான் முன்பேசெய்வாய்
நீட்சையிரு நூற்றுள்ளே திடமாய்ச்சொன்னேன்
மண்ணவே லேகியத்தை யாருஞ்சொல்வார்
வளமாகக் காசிடைலேகியத்திற் கொள்ளு
உண்ணவே மண் டலங்கொள் வயதுகண்டு
உத்தமனே நோய்களென்ற தெல்லாம்போகும்
அன்னமொடு பால்சீனி பத்தியந்தான்
அப்பனே மற்றொன்று மாகாவாறே. 19

ஆகாது யென்சொன்னே னேதேதென்று
லயமிருத்துத் தட்டுதற்குப் பத்தியமேவேணும்
வாகான செந்தூரம் நோய்கொண்டோர்க்கு
வளமான வனுபான மறிந்துகூட்டித்
தாகான மண்டலமே குன்றிவீதம்
சாதித்தால் நோயெல்லாம் தவருண்டேபோம்
பாகான பத்தியங்கள் காக்கவேண்டாம்
பத்தியமாம் புகையிலேயும் புளியுந்தானே. 20

தானென்ற ரெண்டும்விட்டு கொண்டாற்கேளு
தவறாது சகலவியாதிகளுந் தீரும்
ஊனென்ற வுடம்பெடுத்தால் சாகாக்கல்வி
உத்தமனே யிதுக்கல்லோ தளசெந்தூரம்
மானென்ற பெண்கள்வலேக் குள்ளேசிக்கி
மாள்வதற்கோ செந்தூர வைப்பைச்சொன்னேன்
தானென்ற பேச்சம்போய் தன்னேக்காணுஞ்
சாதகமாய் லட்சியத்தின் குறிப்பைப்பாரே. 21

பாரப்பா வாசியினல் போகமாகும்
பரிவான தீட்சையினல் சித்தியாகும்
காரப்பா சாபமெல்லாம் நிவிர்த்தியாகும்
கற்பத்தில் முதல்கற்ப மயக்காந்தம்கொள்ளு
சேரப்பா சித்திபெற்ற தேதினலே
செந்தூர மயத்தாலே தெளிந்துகாணும்
பேரப்பா கேட்டுடனே யெமதூதாக்கள்
பேசாதே யோடுவர்காண் பின்பாராதே. 22

பாராதே சித்தாந்த மொன்றுமில்லை
பஞ்சகர்த்தாள் சடலமது வேருமட்டுஞ்
சேராதே யொன்றுசொல்லும் வேதாந்தத்தை
தெளிந்தறிய மாட்டார்கள், சைவமாடு
கூராதே பூரண மென்றதெய்வக்
கோவிலுக்குட் சுயம்புவஸ்து பாதாரத்தை
சேராதே யிருப்பதென்ன வென்றுசொல்லி
செப்புகிறேன் சித்தாந்தந் தெளியாமடே. 23

தெளிவான மனத்தோர்க்கு வாதஞ்சொன்னேன்
திடமற்ற மூடருக்குத் திடமுஞ்சொன்னேன்
தெளிவான பேர்க்குவயித்தியமுஞ் சொன்னேன்
செய்முறையிற் கற்பநெறி கூடவேண்டி
தெளிவான மாணவர்க்கு ஞானஞ்சொன்னேன்
சித்தியுடன் முத்திபெறு யோகஞ்சொன்னேன்
தெளிவான மனதோர்க்கு மவுனஞ்சொன்னேன்
தீட்சையொடு பூசைவிதி செப்பினேனே. 24

செப்பினேன் வாதத்தி லட்சம்காப்பு
திறமான வயித்தியத்தில் ரெண்டுலட்சம்
செப்பினேன் வாதத்தி லாயிரந்தான்
தெளிவாக விருகாண்டந் திறமாய்த்தேர்ந்து
செப்பினேன் சூத்திரந்தா னிருநூறப்பா
தீட்சைவிதி யிருநூறுந் தெளிவாய்ச்சொன்னேன்
செப்பினேன் ஞானமா யிரந்தான்தேர்ந்து
தெளிவாக ஒருநூற்றில் திறந்திட்டேனே. 25

திறந்திட்டேன் வயித்தியத்தில் குறுக்கிலட்சம்
செப்பினே னதிற்பாதி யதனைத்தேர்ந்து
திறந்திட்டேன் வாதத்திற் சூஸ்திரம்போல்
தெளிவாக வயித்தியத்தில் சூஸ்திரமேகட்டி
திறந்திட்டே னிவ்வண்ண முந்நூறுந்தான்
சிறுபிள்ளைக் காணும் வயித்தியந்தான்
திறந்திட்டேன் பூரணசூஸ் திரந்தானப்பா
செய்யிலிருபத்தோ ராயிரத்து அறுநூறே. 26

நூறான யிருபத்து ஒன்று நூறு
ஞுகாவே அறுபத்து நாலுகாண்டம்
வீறான யிதைக்குறுக்கிச் சூஸ்திரம்போலப்பா
வெட்டவெளி பூரணஞ்சூஸ் திரத்தைச்சொன்னேன்
கூறான யிருநூற்றுக் குள்ளேகேளு
கொட்டினேன் சரிதையொடு கிரிகையோடும்
ஏறான யோகமொடு ஞானத்தோடும்
பிலத்தசுவா சந்தனிலே பேணிக்காணே. 27

காணப்பா விட்டகுறை மார்க்கத்தோர்க்கு
கைவிட்ட சூஸ்திரமாய் வெளியிற்போட்டேன்
தோணப்பா கற்பத்திற் பத்துநூற்றுந்
துடியாகக் குறுக்கியிதை நூறாய்ச்சொன்னேன்
பேணப்பா கற்பநூலிரு நூறுஞ்சொன்னேன்
பிலத்ததொரு மாந்திரீகம் நூறுஞ்சொன்னேன்
பூணப்பா யந்திர தந்திர மயேந்திரசாலம்
பூட்டினே ஞயிரந்தான் புகழ்ந்துபாரே. 28

பாரப்பா அடிகொடுத்து கற்பங்கொண்டு
பரிவாக உண்டுவருங் காலந்தன்னில்
சாரப்பா நாதமொடு பித்தத்தாலே
தனித்தசிலேற் பனத்தாலே தாறுமாறாய்
சூரப்பா பாராமல் கற்பங்கொண்டு
சுழன்றுநீ யலையாதே நோய்கள்வரும்நேசம்
காரப்பா செந்தூர மினங்கள்தோறுங்
கட்டாய்ச்செந் தூரித்துக் கடக்கவையே

வையப்பா கற்பங்கள் கொள்ளுமுன்பே
வகையான லேகியங்கள் சூரணங்கள்
செய்யப்பா கிருதமொடு தயிலமோடு
செய்துகொண்டு திஷ்டியப்பா கருமத்தோடு
பொய்யப்பா வுரைப்பதென்ன புத்திசொன்னேன்
புலஸ்தியனே யிதுக்குரைத்த வயித்தியந்தான்
மெய்யப்பா வென்றோர்க்கு மெய்யேயாகும்
விழலென்றாற் பொய்யாகும் விளம்பக்கேளே. 30

## கற்பூர சலாசத்து.

கேளப்பா கற்பூர சலாசத்துத்தான்
கெடியாகப் பலமொன்று பொரிகாரந்தான்
நாளப்பா பலமொன்று ரெண்டுங்கூட்டு
நலமான பருத்திநீறு துத்திவேர்த்தோல்
நீளப்பா பாங்காகக் கியாழம்செய்து
நிசமாக விட்டாட்டு ஒருநாள்மட்டும்
மாளப்பா அஞ்செருவிற் புடத்தைப்போடு
ஆறியெடு கல்வத்தி லாட்டத்தானே. 31

ஆட்டத்து ளாகுமடாவெண் கருவைவிட்டு
அரைத்துவில்லை செய்ரவியி லுலர்த்திக்கொண்டு
மாட்டவே அஞ்செருவிற் புடத்தைப்போட்டு
வாகாக அரைத்துஅஞ்சு திரமுமானால்
காட்டவே வெண்பொடியாம் பதனம்பண்ணு
நலமான பெருவயிறு மகோதரங்கள்
ஊட்டவே நீர்செரிப்புக் கல்லடைப்பு
ஓடுமப்பா வெடியுப்புச் சுன்னநீரே. 32

வெடியுப்புப் பலம்பத்துப் பூநீறுபத்து
வேகமடா பழச்சாற்றிற் சாமமாட்டி
அடியிருப்புக் காண்டியிலே வழித்துவைத்து
அப்பனே கொதிக்கவைக்கத் திண்ணமாகும்
கொடியதப்பா பீங்கானில் நீரதாகும்
கூறினேன் வயித்தியத்தி லுப்புநீரே
துடியப்பா சலாசத்துத் தனக்குமுன்னே
தோயப்பா அதைத்தண்ணீப் புடத்திற்போடே. 33

போடப்பா வதுவல்லோ வறுத்துவாங்கும்
பொறிவந்து கற்பங்கள் கொள்ளும்போது
நாடப்பா தசவாய்வு பேதங்கொண்டு
கச்சாம்பல் கொடியுதிரம் பெருத்துக்காணும்
கூடப்பா விதற்கல்லோ காரச்சுன்னம்
கொட்டினேன் சத்தோடே கூட்டிக்கொண்டு
சாடப்பா உன்கையிலே சத்துக்காரந்
தடையறவே புலிபோலே தாக்கும்பாரே. 34

## அப்பிரக சத்து.

தாக்கிடவே அப்பிரகச் சத்துசொல்வேன்
சாதிப்பே னப்பிரகம் நவநீதந்தான்
வாக்கிடவே பலமொன்று வெடியுப்போடு
வளமான வெண்காரஞ் சாரம்வெள்ளை
தாக்கிடவே தாளகமுங் கெவுரிசூதஞ்
சங்குமுடி தாரமுறு தாரசிங்கு
தேங்கிடவே பூநாக முலர்ந்ததப்பா
சேர்த்திடுவாய் வகைக்குமொரு கழஞ்சிதானே. 35

கழஞ்சியடா பூநீறு பதினொன்றாகக்
கட்டுமடா நவநீதத் தோடுங்கூட்டி
வழஞ்சியணா கலவத்தில் வெண்கருநீராலே
மாட்டிடுவா யிருசாமம் வில்லைசெய்து
குழஞ்சுவிட வச்சிரகுகைக் குள்ளேவைத்துக்
கூறாகச் சில்லிட்டுச் சீலைசெய்து
தழஞ்சுதடா அஞ்சுதிர மிளகப்பாரு
தாக்குலையி லூதிடவே சத்துமாமே. 86

சத்தடா சோதித்தால் மணியாந்தன்னைச்
சதிராகச் சோதிக்க மருந்துகொண்டு
ஒத்தாஞ்சத் திடைக்குச்சோ தித்தேபாரு
உத்தமனே சரிகைவெள்ளி போலேசயம்
பெத்துதடா சூதத்தைப் பதைக்கையிலேகொல்லும்
பெரியோர்கள் நவநீத சத்துவிள்ளார்
சித்திவருங் கற்பத்துக் குறுதிமெத்த
சேரப்பா புடத்தங்கஞ் செலுத்தியாட்டே. 37

ஆட்டிடுவா யப்பிரக சத்துத்தானே
அப்பனே பலமொன்று உருகும்போது
மூட்டிடுவாய்த் தங்கமொரு பலந்தானப்பா
மூசையிலே ரெண்டுமொன்று யுருக்கிவாங்கி
போட்டிடுவாய்க் கலவத்திற் பொடிக்கத்தூளாம்
புகழாகக் கண்டிடைக்கு வீரம்போடு
காட்டிடுவாய்த் தங்கவிடை சூதம்வாரு
கைமுறையாய் முலைப்பாலி லரைத்துப்போடே. 33

போடப்பா நாளொன்றுக் கொருசாமந்தான்
புகழாக மூன்றுநாள் பனியிற்போடு
ஆடப்பா சுருளட்டை போலேசூத
மாகுமடா கெந்தகந்தான் ரெட்டிப்பிட்டு
தேடப்பா பத்திலொன்று சிலையுமிட்டு
தீர்க்கமாய்ப் பொற்றலையின் சாற்றாலாட்டி
சூடப்பா ரெண்டாநா ளரைத்தபின்பு
சுகமாகப் பொடிசெய்து குப்பிக்கேற்றே. 39

ஏற்றியே வாலுகையி லெரிப்பாயப்பா
என்சொல்வேன் மூன்றுநாள் சென்றபின்பு
ஆத்தியே குப்பிக்குள் சலாகையிட்டு
அடியிலே கிண்டிப்பா ரகாரத்தாலே
வாத்தியே செந்தூரம் பவளவர்ணம்
வாச்சுதடா காயசித்தி வசமாய்ப்போச்சு
தேற்றியே விடுவனென்று தேகந்தன்னைச்
சித்திபண்ணு முத்திபண்ணுந் திறத்தைக்காணேன். 40

திறமான அப்பிரக செந்தூரந்தான்
செய்வதென்ன உறுதியென்றால் கற்பத்தாலே
நிறம்பெற்ற தோஷங்கள் சயங்கள்மேகம்
நிலைகெட்ட கண்யபக்கம் மையல்தாகம்
குறமான குட்டங்கள் சாத்தியமாம்ரோகம்
குன்மங்கள் முகரோகம் மூலரோகம்
மறவான பித்தஞ் சிலேஷ்பனத்தால்
அளவற்ற நோயெல்லா மகன்றுபோமே. 41

அகன்றுபோ மப்பிரகசத் தென்றுசொன்னால்
அப்பனே கற்பத்தை யுறுதிபண்ணு
விகண்டமே வாராது விஷமெல்லாம்போம்
வேணபடி கற்பத்தைத் தின்னுதின்னு
அகண்டமெல்லாம் நீயாச்சு மலைக்கவேண்டாம்
அப்பனே வழலைதள்ளிக் கடுக்காய்கொண்டு
இகம்பெறவே மூலிகற்பங் கொள்ளும்போது
இனியில்லா நோய்களெல்லா மெதிர்க்கும்பாரே. 42

ளதுத்துவரும் நோய்களெல்லாம் தூரத்திவேட்டு
மிகுத்தைவிட்டுப் பாத்துக்குள் ளாகபண்ணும்
மதிக்கவருங் கற்பமெல்லாம் வளமாயேற்று
மனம்நினைவ யறிவோடே வளர்ந்தேயேறுந்
துதிப்பதற்கு நாதவொலி காதிற்கேட்குஞ்
சொற்பெரிய குண்டலிக் குணந்திமீளுங்
கதிர்க்குளித்து அப்பிரக சத்துத்தங்கங்
கண்டாயோ செந்தூர மாகையாலே. 43

நிமிளை.

ஆகாகா நிமிளைசத்தைக் கேளுகேளு
அப்பனே பொன்னிமிளை பலந்தானென்று
பாகான ரோமமது பலந்தானென்று
பழச்சாற்றி லூறவைத்து மூன்றுநாள்தான்
வாகாகக் கழுவியதின் மேலேசுத்தி
மைந்தனே அரிதாரம் வங்கம்ரெண்டு
சாகவேபொன் னிமிளைமேற் பொதிந்துபின்பு
சாத்தடா ரோமத்தைச் சார்ந்துகேளே. 44

கேளப்பா குகைக்குள்ளே அரைப்பலம்பூநாகங்
கெடியாக வைத்ததின்மேல் மயூரத்தினிற்கும்
வேளப்பா அரைப்பலந்தான் பாத்திவைத்து
வெண்காரம் அதின்மேல்கால் பலந்தான்வைத்து
வாளப்பா பொன்னிமிளைக் கலசம்வைத்து
மாட்டடா வதின்மேல்கால் பலந்தான்காரம்
நாளப்பா வதின்மேல் அரைப்பலமயூரம்
நன்றாக வதின்மேலே யரைத்திடுபூநீறே. 45

பூநீறு கழஞ்சியொன்று மேலேதூவிப்
பூநாக மரைப்பலந்தான் அதின்மேல்வைத்து
வேனாகக் குகைவாயி லோடுமூடி
விரியாமல் மண்சீலை யஞ்சுசெய்து
தானாக வுலையில்வைத்து ஊதவூது
காந்தமாம் பொன்னிமிளைச் சத்துமாகும்
வானவர்கள் போற்றுமிந்த நிமிளைசத்து
வளமான வெண்கலம்போல் தகரும்பாரே. 46

பாரப்பா நிமிளைசத்து சோதித்தேபின்
பரிவான பொன்னிறமா யீயமாகும்
ஆரப்பா நிமிளைசத்து ஆருஞ்சொல்லார்
அப்பனே வயித்தியத்துக் குறுதியாகுஞ்
சேரப்பா கற்பத்தால் வந்ததோஷம்
நீருமடா நோய்களெல்லாம் படிதானென்றால்
மோரப்பா பருப்பதம்போற் பஞ்சுவைத்து
மிளகதுபோற் றீயைவைத்த கதைபோலாமே. 47

## நிமிளைச் செந்தூரம்.

போமென்ற நிமிளைசத்துப் பலந்தானொன்று
பூட்டடா மூசையிலே யுருகும்போது
ஆமென்ற கருநாகம் பலந்தானொன்று
அப்பனே தங்கமது பலந்தானொன்று
சாமென்றேன் தங்கமொடு வங்கம்ரெண்டு
சாதகமாய்க் கலவத்திற் பொடிக்கத்தூளாம்
வேமென்றேன் வீரமது பலந்தானாலு
மேலான முலைப்பாலே விட்டுஆட்டே. 48

ஆட்டையிலே கோழிமலம் வெள்ளைகேளு
அப்பனே கால்பலந்தான் கூடப்போட்டு
மூட்டையிலே வாலைரசம் சவ்வுபோலாம்
முறையான சூதம்ரெண்டு பலமேவாரு
மாட்டையிலே மூன்றுநாள் பனியிற்போடு
மறுபடியுங் கெந்தகந்தான் பலமீராறு
கூட்டையிலே பொற்றலையின் சாற்றாலாட்டிக்
கொடியசிலைக் காற்பலமுங் கூடப்போடே. 49

போட்டிடுவாய் வில்லைசெய்து ரவியிற்றானே
பொடிசெய்வாய் பின்பெடுத்துக் குப்பிக்கேற்றி
நாட்டிடுவாய் வாலுகையில் மூன்றுநாள்தான்
நலமாக முத்தீயும் நன்றாயிட்டு
மூட்டிடுவாய் சலாகைகொண்டு சோதித்துப்பார்
முனையிலே காகாக்கும் பதந்தானப்பா
கூட்டிடுவாய் குப்பிதனை யுடைத்துவாங்கு
குப்பசிவப் புறுநிமிளை சுறுக்குத்தானே. 50

சுறுக்கான செந்தூரம் நிமிஷையாச்சு
சொல்லக்கேள் ஒருபோது குன்றியுண்ணக்
கறுப்பான ஆவின்பால் தன்னிற்கொள்ளக்
கண்விழித்து மூடுமுன்னே பிணமும்பேசும்
வெறுத்தான சடலத்தைக் காலனப்பா
மெய்யுளைச்சல் பொறுத்துளைச்சல் சுதைக்குள்தோஷம்
முறுக்கான விஷக்கடிகள் விடத்திற்குஷ்டம்
முகவாத மேகமென்ற தெல்லாம்போமே. 51

போமடா வாதத்தில் வந்ததோஷம்
போகுமடா பித்தத்தால் வந்ததோஷம்
மாமடா சிலேஷ்டமத்தால் வந்ததோஷம்
மல்லாந்தான் நிமிஷைசத்தைக் கண்டபோதே
நாமடா உனக்கெதிரோ வென்றுநோய்கள்
நாட்டிலே யெவரிடத்துஞ் சேரப்போனல்
காமடா நிமிஷையங்கே கண்ணுற்பார்த்தால்
கட்டோடே கடல்புக்குஞ் சதியில்லாதே. 52

இல்லாதே யிருந்துகொண்டு கற்பங்கொண்டா
லிலட்சியத்தி லறிவோடே வாசிபார்த்து
வல்லமையாய் சாதிக்கும் யோகசித்தி
வளமான குளிகைமுதல் மந்திரதீட்சை
நல்லதொரு பூசைவிதி யமுர்தலேகியம்
நலமான வாதமொடு பிலக்கக்கண்டு
செல்லுவாய் பின்பங்கே சித்தரோடே
சேரலாங் கைகொள்வார் திறத்தைப்பாரே. 53

திறமான வயித்தியத்தைச் சொன்னேனப்பா
திறங்கெட்ட லோகர்க்கோ செப்பினேன்கே
ளுறுவாத ரசவாதத்துள் ளழுந்திப்பின்னே
உத்தமனே யினசாரி சரக்குச்சேர்த்தால்
நிறுவிக்கும் வயித்தியந்தான் வாதிக்காகும்
நேரான காலசித்தி நிசமதாகும்
விருதடா பேசியே லோகத்தோர்கள்
வேரோடே வயித்தியமெல்லாம் வருமென்பாரே. 54

## தாளக நீறு.

பாரப்பா புலத்தியனே அய்யாகேளு
பாங்கான தாளகத்தி னீறுசொல்வேன்
சேரப்பா தாளகந்தான் பலந்தானென்று
திறமான கல்சுன்னத் துள்ளேவைத்து
சாரப்பா அமரிபடி விட்டுநீற்றுத்
தாளகந்தான் சுத்தியதா மிரண்டுபத்தில்
வேரப்பா பழச்சாறு படிதானூட்டு
வெள்ளச்சி மூலைப்பால்தான் படிகா லூட்டே. 55

ஊட்டியபின் அரிதாரம் பேராமுட்டிச்சா
ராத்தியே யரைத்திடுவா யிரண்டுசாமம்
ஆட்டியபின் வில்லைசெய்து ரவியிற்போடு
அப்பனே மூன்றுநாள் காய்ந்தபின்பு
கூட்டியதோர் செருப்புக்கால் படியின்சாறு
கொட்டுவாய் குகைக்குள்ளே புரசஞ்சாம்பல்
நாட்டியே மேல்மூடிச் சீலைசெய்து
நயமாக விரண்டெருவிற் புடத்தைப்போடே. 56

## சூதபற்பம்.

புடம்போடத் தாளகந்தான் வெளுத்துநீறும்
பேசாதே தாளகத்தின் வெள்ளை தன்னைத்
திடம்பெறவே சிமுளுக்குள் பதனம்பண்ணு
செப்பக்கேள் சூதபற்பந் திறமாய்ச்சொல்வேன்
அடம்பிலையும் கடம்பிலையும் சிறுபுட்காலு
அப்பனே வகைக்குமொரு படிச்சாருக்குள்
விடமதிட்டு வார்த்ததிலே காந்தைச்சாறு
விளங்கவே படியொன்று அதினுள்வாரே. 57

வார்த்திடுவாய் முன்செய்யும் வரிசைகேளு
வாகான காட்டுள்ளிக் கிழங்குச்சாறு
சேர்த்திடுவாய் கார்த்திகையின் கிழங்குச்சாறு
சேரவே பண்ணுங்கோல் மூலிச்சாறு

ஏர்த்திடுவாய் வகைக்குமொரு படிசாருக
எடுத்தல்லோ சூதமொரு பலத்துக்குத்தான்
பார்த்திடுவாய் காந்தசத்தின் கிண்ணத்துள்ளே
பதையாமற் சாகுமடா சுறுக்குத்தாக்கே. 58

சுறுக்கிட்ட பின்பெடுத்துச் சூதந்தன்னைத்
துடியாக கலவத்தி லிட்டுக்கொண்டு
வெறுத்திட்ட முன்சாற்று லரைப்பாயப்பா
மெழுகுபோ லாகிவரும் வில்லைசெய்வாய்
உருகிவிட்ட ரவியிலே காயப்போடு
உத்தமனே குகைக்குள்ளே வைத்துமூடி
வெறுக்கிட்ட சீலைசெய்து புடத்தைப்போடு
வெளியிலே பரைபூசை விளம்பச்செய்யே. 59

செய்யவே தேவியங்கே வார்த்தைசொல்வாள்
திடமான சூதபற்பம் வாச்சுதென்பான்
பையவே அஞ்செருவிற் புடத்தைப்போடு
பாங்காக ரசவெள்ளை ரசகற்பூரம்
மெய்யப்பா கற்பத்தால் கூட்டமீதில்
விஷசீரால் குறைரோவு கண்டதானல்
மையவே சூதபற்பங் குன்றிதானும்
மகத்தான தாளகத்தின் பற்பங்கூட்டே. 60

கூட்டிடுவாய் குன்றியிடை யிரண்டுங்கூட்டிக்
கொள்ளுவாய் நூறுண்டின் வேப்பம்பட்டை
நீட்டுவாய் ப்கமநூறு வெள்ளாட்டெச்சம்
நிசமாக அஞ்சுபத்து பலமேசேர்த்துக்
காட்டுவாய்ப் பூத்தயிலம் வடித்துவாங்கி
கருவான வீழிவேர்ச் சூரணமேசெய்து
மாட்டுவாய் செருப்புக்கால் தனிசாற்றுக
வாங்குவாய் படிநாலு மதனில்வாரே. 61

வாரப்பா பனைவெல்லம் பலந்தான்பத்து
மருவியே கரைத்திடுவா யடுப்பிலேற்றிச்
சேரப்பா கமலத்தீ யாகமூட்டு
செப்பினதோர் வேம்பினுட தயிலந்தன்னைக்

கோரப்பா படியொன்று கூடவிட்டு
  கொட்டவே வீழிரு ரணத்திேைடு
சாரப்பா படியரைதான் புங்கம்பூவுந்
  தனிச்சூரணத்தோ டரைப்படி தான்போடே, 62

போடப்பா மிளகுசுக்கு ஓமங்காயம்
  புத்தோடு தொட்டியொடு கிரும்புயேலம்
ஆடக்கேள் சீரகமு மதுரமோடு
  அப்பனே வகையொன்று கழஞ்சியொன்று
நாடக்கேள் கார்கோலரிசி பலம்நாலு
  நாட்டடா பறங்கியுட பட்டைபலம்நாலுஞ்
சூடக்கே ளிளவறுப்பாய் சூரணமேசெய்து
  சூரணமெல்லா மொன்ருய் சூட்டிவையே. 63

வைத்தபின்பு காரெள்ளுப் பலந்தானஞ்சு
  மருவியிடி செங்கோட்டைப் பலமிரண்டு
நைத்தபின்பு சூரணத்தைப் பிசைஞ்சுகொண்டு
  நலமான பாகுசெய்து வருமந்நேரம்
பொய்த்தல்ல சூரணத்தை யதிலேபோட்டு
  பூணவே தேனுமொரு படிதான்வாரு
மெய்த்திடவே ஆவிநெய் படிதான்வாரு
  மெழுகுபதம் ஆம்போதே வழித்துவாங்கே. 64

வழித்துவைத்து பீங்கானுக் குள்ளேநீதான்
  வாகாகத் தினமொன்றுக் கிருநேரந்தான்
கழிப்பாக லேகியத்தைக் கழஞ்சிவீதம்
  கர்த்தாவை மனதுக்குள் தியானம்பண்ணி
யொழிந்திடவே முன்சொன்ன பற்பங்கூட்டி
  உண்ணவே மண்டலந்தான் புளியாகாது
தழிப்பர்ன புகையிலையும் வழுதலங்காய்விட்டு
  தகையாகப் பாலுப்பைச் சத்தைதக்கூட்டே. 65

கூட்டவே பதினெட்டு குஷ்டமெல்லாங்
  குடிப்போருே மென்றுசொல்லிச் சட்டைதள்ளூம்
நாட்டோடு சாராது பத்தியந்தான் தப்பில்
  சண்ணுமடா தாளகமுஞ் சூதபற்பம்

வீட்டோடே யிருந்துபின்பு பத்தியங்காத்தல்
வெகுசுறுக்காய் கேட்குமடா சூதபற்பம்
பாட்டோடு துன்பம்விட்டு துயரநீங்கிப்
பரிசினத்தின் வேதையைப்போல் தேகமாமே. 66

அண்டச்சத்து.

ஆமப்பா அண்டோடு பலந்தானென்று
அப்பனே சூதமொடு காரசாரந்
தாமப்பா கெவுரிவெள்ளை யரிதாரந்தான்
சாதகமாய் மிறுதார சிங்கியோடு
போமப்பா வகையொன்று கழஞ்சிரெண்டு
புதிதான கலவத்தி லரைக்கக்கேளு
நாமப்பா வெண்கருநீர் விட்டுஆட்டி
நலமாகச் சாமம்ரெண்டு வில்லைகட்டே. 67

கட்டியபின் ரவியிலே மூன்றுநாள்தான்
காய்ந்தபின்பு குகைக்குள்ளே வைத்துமூடி
ஒட்டியபின் சீலைசெய்து உலையிலூது
உத்தமனே வொருமணியாய் நிற்கும்பாரு
வெட்டிணியா மண்டோடு வெண்கலம்போலாகும்
விள்ளார்க ளுபசரித்துக் காதியப்பா
அட்டியில்லை யண்டசத்தைச் சோதித்தேதான்
அப்பனே ஈயந்தான் பலந்தான்தூக்கே. 68

தூக்கப்பா சமனாகத் தங்கந்தன்னைத்
துடியாக விரண்டுமொன்று யுருகும்போது
தாக்கப்பா சூதமொரு பலத்தைவாரு
தப்பளையைச் சற்பமது மிழுங்கும்வாறும்
போக்கப்பா நாகமொரு பலத்தைப்போடு
போட்டபின்பு வீரமொரு பலந்தான்போடு
வாக்கப்பா லிங்கமொரு பலந்தான்போடு
மருவிநின்று உருகுமடா களங்கமாச்சே. 69

ஆச்சப்பா களங்கத்தைக் கலவத்திட்டு
அடங்காத கெந்தகந்தான் ரெட்டிப்பிட்டு
வாச்சப்பா பத்திலொன்று சிலையுமிட்டு
வாகாகக் கற்றாழைப் பாலாலாட்டு

வீச்சப்பா நாளொன்று பொற்றலையின்சாற்றால்
விளங்கவே ரெண்டுநா ளானபின்பு
பாச்சப்பா வில்லைசெய்து ரவியிற்போடு
பாங்காக மூன்றுநாள் காய்ந்தபின்பே. 70

காய்ந்தபின்பு குப்பையிலே செலுத்திக்கொண்டு
கருணைபெற வேணுமென்றே வாலுகைக்கெந்திரம்
வாய்ந்ததோர் முத்தியு மூட்டுமூட்டு
வளமாக நாலாநாள் குப்பிவாங்கு
சாய்ந்ததொரு அருணனைப்போற் செந்தூரந்தான்
சாதிக்கு மெதிராளி யெதிர்க்கமாட்டான்
ஆய்ந்ததொரு அண்டத்தின் வங்கநாக
மடர்கழஞ்சி சூதகெந்தி யருளைப்பாரே. 71

அருளான கற்பங்கள் கொள்ளும்போது
அடங்காத தாகமொடு நீரிரக்கம்
மருளான மயக்கமொடு கண்ணிமையல்
வாதத்தி லெழுந்த யினைரோகம்
சுருளான மந்தார காசமோடு
சுவாசகா சத்துடனே சதையில்தோஷம்
கருவான கற்பத்தால் கலந்தநோய்கள்
கண்காணு தோனுமப்பா கண்டுபாரே. 72

## க்ஷயரோகத்துக்கு லேகியம்.

கண்டுகொள்ளு மண்டலத்தின் செந்தூரந்தான்
கலைக்குமடா நாடியெல்லா மிறுகுந்தேக
மொன்றுவிடு குன்றியிடைப் பனைவெல்லத்தில்
உத்தமனே ஒருபோது கொண்டாற்போது
மண்டுகின்ற க்ஷயரோக மிஞ்சித்தானல்
வகையொன்று சொல்லக்கே ளாடாதோடை
யிண்டுசங்கு தூதுவளை முருங்குமுல்லை
இளந்துளசி கண்டங்கத் திரியாமென்னே. 73

என்னவே மூலிகைதான் வகையொன்றுக்கு
இடித்ததொரு சாறப்பா படிவீதந்தான்

சொன்னசொன்ன மூலியுட சாற்றையெல்லாம்
தோணவே பனைவெல்லம் பலமுமூன்று
அன்னவே யடுப்பில்வைத்துக் காயும்போது
அரத்தையொடு திரிகடுகு திரிபலாதி
மின்னவே கற்கண்டு வசம்பினோடு
விளங்கவே வகையொன்று பலந்தான்ரெண்டே. 74

பலமான தொருபலந்தான் நெற்பொரியுங்கூட்டிப்
பாங்காக மருந்தையெல்லாம் சூரணித்து
செலமான பாகெல்லாம் பாகஞ்சேரில்
திடமான சூரணத்தை யதிலேபாச்சு
பிலமான தேனதிலே படிதான்வாரு
பேசாதே ஆவினெய் படிதான்வாரு
குலமான லேகியமாய் வழித்துவைத்து
கூசாதே பீங்கானிற் பதனம்பண்ணே. 75

பதனமாய் வைத்திருப்பாய் லேகியத்தைப்
பாங்கான கழஞ்சிநிறை யெடுத்துக்கொண்டு
சுதனமா யண்டத்தின் செந்தூரத்தை
சுறுக்காகக் குன்றிவிடை யொருபோதுண்ண
விதனமெல்லா மொழிந்ததடா க்ஷயரோகங்கள்
வேரோடே அறுந்ததடா உபாசத்தின்வேகம்
மதனகா மேசுரமாம் விந்துகட்டும்
மங்கையரைத் தோய்ந்தாலும் வாராதென்னே. 76

வாராது கிருஷ்ணஅப் பிரகந்தன்னை
வாய்ப்பாக நவநீத மாகச்செய்து
போராது பலமொன்று வாங்கிக்கொண்டு
பிலத்தவெடி யுப்புடனே காரசாரஞ்
சாராது சீனமொடு சூடன்கூட்டித்
தயவான கல்லுப்பு வகையொன்றுக்கு
வாராதே கழஞ்சியொன்று கூடப்போட்டு
வாகான பழச்சாற்று லொருநாளாட்டே. 77

ஆட்டியபின் வில்லைசெய்து உலரப்போட்டு
ஐம்பதெருக் குள்ளேதான் புடத்தைப்போட்டு

மூட்டியபின் னெடுத்ததனைக் கலவத்திட்டு
முழங்கவே கற்பூர வல்லிச்சாற்று
லூட்டியபின் னரைத்திடுவாய் பலந்தான்கெந்தி
உலரப்போடு நாளொன்று சென்றால்வில்லை
காட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
கட்டகேள் ஐம்பதெருக் குள்ளேபோடே. 78

போடப்பா புடமாறி யெடுத்துக்கொண்டு
புகழாகப் பழச்சாறு கலவத்திட்டு
ஆடப்பா நாளொன்று அரைத்துவில்லை
அப்பனே யரைத்துமுன்போற் புடத்தைப்போடு
தேடப்பா ஆறினபின் கலவத்திட்டு
திடமான குட்டித்தக் காளிச்சாற்றால்
கூடப்பா நாளொன்று அரைத்தபின்பு
குமுறவே வில்லைசெய்து புடத்தைப்போடே. 79

புடமாறி யெடுத்ததனை யெருக்கம்பாலாற்
பேசாதே நாளொன்று அரைப்பாயப்பா
திடமாக வில்லைதனை உலர்த்திக்கொண்டு
சிறப்பாக முன்போலே புடத்தைப்போடு
நடமாடு பின்பொருக்கால் பழச்சாற்றாலே
நலியாதே தினமொன்று அரைத்தபின்பு
உடனாடு சத்துருவாங் காரசாரம்
உத்தமனே தனக்கெல்லாந் தின்றவாறே. 80

வாறுடனே கறுத்திருந்த தேவிநாத
மாண்டுதடா கனபுடமாய் மூட்டுமூட்டு
கூறுடனே அப்பிரக நவநீதத்தைக்
கொன்றவனைய் வயித்தியத்திற் கொட்டினேனன்
வீறுடனே செந்தூரம் நன்றாகவிட்டால்
விளங்கவே பொற்றலையின் சாற்றாலாட்டித்
தேறுடனே நூறெருவில் புடத்தைப்போடு
செந்தூர மாகுமடா செப்பக்கேளே. 81

கேளப்பா அப்பிரக நவநீதத்தைக்
கெடியாகத் திரிகடுகு தன்னிற்கூட்டி

வாளப்பா தேன்நெய்யுங் கலந்துகொண்டு
மருவியசெந் தூரமிது குன்றிகூட்டி
கேளப்பா கற்பத்தால் வந்ததோஷங்
கூட்டோடே போகுமப்போ பத்துநாள்கொள்
ஆளப்பா உதிரத்தில் வாயுவெல்லாம்
அபானத்தின் கீழ்வாசல் புக்கிப்போச்சே. 82

போச்சப்பா மேகமென்ற தெல்லாம்போகும்
பூண்டதொரு சீரிரக்கம் போகுமப்பா
ஆச்சப்பா சிந்தியுட சர்க்கரையினாலே
ஆச்சரியம் அஸ்திசுரம் தோஷமில்லை
போச்சப்பா நாடிகளில் தோஷமில்லை
பிரபலமாய்த் தேகமெல்லாம் குளிர்ச்சிபண்ணும்
வாச்சப்பா வயித்தியத்திற் சர்க்கரையேசொல்வார்
வாய்ப்பேச்சோ வயித்தியந்தான் வணங்கிக்கேளே. 83

வணங்கியே நீகேளு புலத்தியனேஅய்யா
மாறுட்டமில்லாமல் சர்க்கரையைச் சொல்வேன்
குணங்கியே போகாமல் மருந்துண்டாகக்
கொண்டுவந்து நிழலுலர்த்திக் காய்ந்தபின்பு
பிணங்கியே போகாம லிடித்துத்தூளாய்
பிலமாக வடிகொண்டு சூரணித்து
மணங்கியே பொடிபடிதா னொன்றுக்குள்ளே
வாசமாய் நாலுபடி சலத்தைவாரே. 84

வார்த்திடுவாய் மறுநாளி லிருத்துப்போட்டு
மறுபடியுஞ் சலமதிலே முன்போல்விட்டு
கோர்த்திடுவா யிப்படியே பத்துவண்ணங்
கூறாகச் செய்தபின்பு சொல்லக்கேளு
பார்த்திடுவாய் புளித்ததொரு காடிக்குள்ளே
பழச்சாறு பதினாறுக் கொன்றுவாரு
சேர்த்திடுவாய் முன்போலே யிறுத்துப்போட்டுத்
திறமாக மறுபடியும் செய்யக்கேளே. 85

கேளப்பா புலத்தியனே சிந்தியுடகைப்புக்
கெட்டதில்லை சித்தரல்லோ செயஞ்செய்வோர்கள்

ஆளப்பா வாயிலிட்டா லண்டவரைமட்டு
மாகாகா கைப்பென்றால் வேப்பங்காயீடோ
வாளப்பா வயித்தியனே வென்றுசொன்னேன்
வாதிக்கல்லோ வுரைத்த மார்க்கமல்லோ
ஆளப்பா ஆவின்மோர் படிநாலுக்குள்
அப்பனே கால்படிதான் பழச்சாறிட்டே. 86

பழச்சாறுவிட்டபின்பு ஒருபடியாம் பொடிக்குப்
பாங்காகக் கரைத்துவைத்து மறுநாள்கேளு
பழச்சாறு விட்டமோ ரிறுத்துப்போட்டுப்
பாலாவின் பால்படிக்குப் பொடிபடிதான்போடு
இழிச்சதல்ல வங்காள சீனிகேளு
என்சொல்வே னரைப்படிதான் சீனிபோடு
தழச்சுதப்பா ரவியிலே யுலர்ந்தபின்பு
தானமிர்த சர்க்கரையா மென்றுகாணே. 87

காணப்பா இப்படியே சர்க்கரையேசொல்வார்
கைகண்ட சித்தரென்றால் பிழைக்கச்சொல்வார்
வீணப்பா மற்றதெல்லாம் சர்க்கரையேஅல்ல
வீறுகின்ற கைப்பதனை யடக்கமாட்டார்
தோணப்பா சர்க்கரையை வாயிற்போடச்
சுறுக்கடா அஸ்திசுர மெல்லாம்போகும்
பூணப்பா இதினோடே மருந்துகூட்டப்
புகலுவேன் புலத்தியனே கேளுகேளே. 88

கேளப்பா திரிகடுகு மதுரமோமங்
கெடியான வாய்விளங்கம் தறுக்குமூலங்
கேளப்பா கற்பூரம் குங்குமப்பூ
கிறுப்புடனே சிரகங்கோ ரோசனைகஸ்தூரி
கேளப்பா சாதிக்காய் சாதிபத்திரி
கிருபையுடன் வகையொன்று பலந்தானென்று
கேளப்பா இளவரையாய் சூரணித்துக்
கிருபையுடன் சொல்லக்கூ விளத்தின்பூவே. 89

பூவதனை நிழலுலர்த்திச் சூரணித்துப்
பூட்டிடாய் சமனாச் சீனிக்காலாய்

பூவதனைச் சேகரித்த சூரணந்தான்
புகழமுர்த சர்க்கரைக்கு நாலுக்கொன்றாய்ப்
பாவதனைக் கலந்துகொண்டு பதனம்பண்ணு
படுபாவி மேகசலம் பறந்துபோகும்
ஆவலுற லேகியமாய்ச் செய்யக்கேளு
அப்பனே தாழைவிழுது சாறுவாங்கே. 90

வாங்கியே படிநாலு புதுச்சட்டிக்குள்
வாரப்பா படிநாலு இளநீருந்தான்
தேங்கியே ரெண்டுமொன்றாய்க் கியாழஞ்செய்ய
செப்புவேன் குருவிஞ்சு பலந்தானென்று
வோங்கியே சிறுபுட்கால் பலந்தானென்று
உத்தமனே யிஞ்சியது பலந்தானென்று
தாங்கியே நன்னாரிப் பலந்தானென்று
சாந்தமா யேலமது பலந்தானென்றே. 91

ஒன்றாக விதுவெல்லா மிடித்துப்போட்டு
ஒருபடியா யிறுகியபின் னதிலேகேளு
நன்றான சீனிபலம் நாலும்போடு
ரசபாகம் வருநேரந் தன்னிலேதான்
வென்றதொரு அமிர்தசஞ் சீவிதன்னை
மேவிஅரைப் படியளந்து யதிலேபோடு
கன்றான ஆவின்நெய் படிகால்வாரு
கலங்காதே நெய்பிற்பாதி தேனைக்கொட்டே. 92

கொட்டினபின் மெழுகுபதம் தன்னிலேதான்
கூறான பீங்கானில் வழித்துவைப்பாய்
வெட்டினேன் தேகத்துள் நோய்களெல்லாம்
விடயமிட்டு விடயமிட்டுச் சோதித்தேதான்
அட்டியாச் சொல்வதிந்த அமிர்தலேகியம்
அப்பனே ஆருக்குஞ் சொல்லவில்லை
மட்டில்லா வயித்தியந்தான் சாஸ்திரமுஞ்சொன்னேன்
மாறுட்ட மில்லையொன்று மிதுக்கொவ்வாதே. 93

ஒவ்வாத லேகியத்திற் கழஞ்சிதூக்கு
உத்தமனே அப்பிரக செந்தூரத்தைச்
செல்வாகக் குன்றியிடைத் திறமாய்க்கொள்ளு
தேகத்தில் மேகசுரம் மேகவெட்டை

கவ்வாக அஸ்திசுரம் வேகம்போகும்
கபாலத்தில் வெட்டைசுரம் குட்டம்போகும்
இவ்வகைதான் பத்துநாள் கொள்ளும்போது
எமனாலும் வெல்லரிது தேகந்தானே. 94

## பவளவங்கச் செந்தூரம்.

தானென்ற பவளவங்கச் செந்தூரங்கேளு
சார்வான வங்கமது பலந்தானொன்று
கானென்ற நற்பவளம் பலந்தானொன்று
கைமுறையாய்ச் சிலாசத்துப் பலந்தானொன்று
வேனென்ற பழச்சாற்றால் மூன்றுநாள்தான்
விடிகாலை மாலைரெண்டு சாமமாட்டி
கோனென்ற வில்லைசெய்து ரவியிற்போட்டு
கூறாக உலர்ந்தபின்பு புடத்தைப்போடே. 95

போட்டெடுத்து நாவிலொன்று கெந்திகூட்டிப்
புகழான பொற்றலையின் சாற்றாலாட்டி
மீட்டெடுத்து வில்லைதனை உலர்ந்தபின்பு
வெகுசுருக்கா யைம்பதெருப் புடத்தைப்போடு
மூட்டெடுத்த கருவங்கள் செந்தூரந்தான்
மோசமில்லை முக்காலும் புடத்தைப்போடு
கூட்டெடுத்துப் பொடிசெய்து பதனம்பண்ணு
துடியாகக் குன்றியிடை கொள்ளுகொள்ளே. 96

கொள்ளப்பா அமூர்தசஞ் சிவிதன்னிற்
கொண்டபின்பு சலக்கழிச்சல் கடுப்புரத்தம்
விள்ளடா குறியெரிப்பு லிங்கப்புற்று
மேகத்தி னலெழுந்த தோஷமெல்லாம்
வெள்ளடா அணுவளவு கற்பத்தாலே
வெழுந்ததொரு மேகசல முறிந்துபோச்சு
தள்ளாத எமனானை வாசிகொண்டு
சாற்றடா மண்டலந்தான் சித்தியாமே. 97

## அயச்செந்தூரம்.

ஆமப்பா அயத்தகடு பலந்தானொன்று
அப்பனே ஐந்திடைக்குச் சூதங்கூட்டி

வேமப்பா கலவத்தி லாட்டூட்டு
வீரமொடு நவாசாரம் பலந்தானென்று
வாமப்பா மூன்றுநாள் கைவிடாமல்
மாட்டியரைப் பொடியாகச் சிவந்துபோகும்
மோமப்பா புதுசட்டி யடுப்பில்வைத்து
மோசங்கள் வாராமல் வறுத்திடாயே. 98

வறுக்கையிலே பதம்பாரு முருக்கம்பூப்போல்
வர்ணமிட்ட பதத்தோடு கருமல்வாங்கு
நிறுக்கையிலே குன்றியிடை பனைவெல்லத்தில்
நேசமாம் கொண்டிடவே சூலைவாங்கும்
ஒறுக்கையிலே யிதின்சுறுக்கு ஏதுக்குமில்லை
ஓகோகோ குஷ்டமெல்லா மொழிந்துபோகும்
மறுக்கையிலே யிதின்சுறுக்கு ஏதுக்குமில்லை
வாதமீர் விஷக்கடிகள் வாங்கிப்போமே. 99

## துரிசி சேந்தூரம்.

வாங்கிப்போந் துரிசிசெந்தூ ரத்தைநீகேளு
வாகான அரைப்பொடிதான் பலந்தானென்று
தேங்கிப்போங் கெந்தகந்தான் பலந்தானென்று
திறமாக வதன்பின்பு செப்பக்கேளு
தாங்கிப்போந் துரிசுமதிற் பலந்தானென்று
சாதகமாய் பழச்சாற்றில் தினம்ரெண்டாண்டு
ஓங்கியதோர் வீரமது கழஞ்சியொன்று
உத்தமனே அரைத்ததனை வில்லைகட்டே. 100

கட்டியே ரவிதனிலே யுலர்ந்தபின்பு
கனபுடமே போடப்பா மயங்கவேண்டாம்
ஒட்டியே ஆறினபின் செந்தூரந்தா
னுண்மையாய்த் திரிகடுகில் குன்றியிடைகூட்டி
அட்டியாய் மண்டலந்தான் கொள்ளும்போது
ஆச்சரியங் குன்மமென்ற தெல்லாம்போகும்
சுட்டியே கெற்பத்தில் தோஷம்போகும்
துடியான கிருணியெல்லாஞ் சூட்டப்போமே. 101

### அயக்காந்த செந்தூரம்.

சூட்டப்பா வரைப்பொடிதான் பலந்தானென்று
துடியான கெந்தகந்தான் பலக்தானென்று
மூட்டப்பா லிங்கமொடு காரசாரம்
முனையான உப்புரெண்டு கூடன்சீனம்
மாட்டப்பா வகையொன்று கழஞ்சியொன்று
வாதியென்ற பூவதிலே கழஞ்சியொன்று
வாட்டப்பா காந்தமது பலங்கால்கூட்டி
வளமான பழச்சாற்றி லரைத்திடாயே. 102

அரைத்திடுவாய் ரெண்டுநாள் கைவிடாமல்
அப்பனே உலர்ந்தபின்பு வில்லைதன்னை
விரைத்திடுவாய் வராகபுட மாறிப்பின்பு
விளங்கியதோர் முருக்கம்பூப் போலாம்வில்லை
நிறைத்ததனைப் பொடிசெய்து பதனம்பண்ணு
நிலையில்லாப் பாவியென்ற பாண்டுரோகம்
கரைதடுக்க வொட்டாது கடலேபுக்கும்
கைகண்ட செந்தூரங் கண்டுகொள்ளே. 103

### பாண்டு லேகியம்.

கண்டுகொள்ளு மாவின்பால் படிதானென்று
கைலோகம் நன்னாரி விலாமிச்சம்வேர்
விண்டுகொள்ளுங் கீழ்க்காய் நெல்லிவேரும்
விளங்கியதோர் வகையொன்று பலந்தானென்று
உண்டுகொள்ளும் படியெட்டுச் சலத்திலுள்ளே
உத்தமனே போட்டுலர்த்திப் படிதானென்று
மண்டுபடாப் பாலுடனே கூடவாரு
மைந்தனே சுமுகம்பூச் சாறுவாரே. 104

வாரப்பா படியொன்று பழச்சாறங்கே
வரிசையாய்ப் படியொன்று கரியான்சாறு
சேரப்பா படியொன்று கீழ்காய்நெல்லித்
தெளிவாகத் தாழைச்சாறு படிதானென்று
சாரப்பா ரெண்டுபத்துப் பலந்தான்வெல்லக்
தான்கரைத்து எரியிடவே பாகுசேரில்

ஏரப்பா திரிபலையுஞ் சீரகத்திஞேடு
யியல்பான திரிகடுகு ஏலந்தானே. 105

ஏலமில வக்கத்தோ விலேகிரும்பு
எவாச்சாரஞ் சாதிக்காய் கறுக்குமூலம்
வால்மிளகு வாய்விளங்கம் கோட்டமப்பா
வகையொன்று பலமொன்று சூரணித்து
ஆலவாய் சங்குபொடி யதிலோாதி
யப்பனே பாகுவரும் போதிற்போடு
சாலவே ஆவின்நெய் படிதான்வாரு
தவருமல் தேனதிலே பாதிவாரே. 106

வார்த்திடவே மெழுகுபத மானவாறில்
மக்களே மீங்கானில் பதனம்பண்ணு
கோத்திட்டு லோகசெந் தூரத்தில்தின்னும்
குன்றியிடை தினமொன்றுக் கிருகோந்தான்
சாத்திடவே லேகியந்தான் கழஞ்சிரெண்டு
சாதித்து மண்டலமே தின்பாயாகில்
ஏத்திட்டு எந்தவகைப் பாண்டானுலும்
இலேகியசெந் தூரத்தைக் கண்டபோதே. 107

கண்டவுடன் பாண்டக்கே பறந்துதப்பா
காயங்கள் வெளுத்திருந்த தெங்கேபோச்சு
கொண்டவுடன் புளியொடுபுகை யிலையுமாகா
கொடுமையுள பெண்ணுகா துளுந்துமாகா
பண்டுடைய பத்தியத்தை விட்டானுனல்
படுபாவி லேகியசெந் தூரந்தானே
சண்டமா ருதம்போலே மெய்யழித்துச்
சண்ணுமடா மாற்றுமருந் தில்லைதானே. 108

மாண்ரே செந்தூரம்.

இல்லையென்று போகாமல் சொல்லக்கேளு
எலுமிச்சம் பழம்பத்து நாலாய்க்கீறி
தொல்லையென்று போகாமல் அயச்செந்தூரந்
தூக்கடா பலங்கால்தான் மாண்டூரத்தைச்
செல்லவே சாணுக செந்திகூட்டித்
திறமாகப் பழச்சாற்றுல் ரெண்டுசாமம்

அல்லவே அரைத்துவில்லை யுலர்ந்தபின்பு
அப்பனே வாகாகப் புடமாறிப்பின்பு
வல்லதொரு செந்தூரங்கால் பலமேதூக்கி
வகையான இந்துப்புக்கழஞ்சி ரெண்டுகூட்டே. 109

கூட்டியே முன்மருந்து மொன்ருய்சேர்த்துக்
கொண்டுநீ சீரகமோர் கழஞ்சிகூட்டி
நாட்டியே பழத்துக்குச் சேரவிட்டு
நல்மான கரியன்சாறு நாழிவிட்டு
முட்டியே கற்ருழஞ் சாறுநாழி
முழுகின்ற செருப்படியின் சாறுநாழி
தாட்டிகமாய் மூன்றுமொன்ருய்ச் சாறுவார்த்து
சட்டியிலே பழத்தையெல்லாம் பதித்துவையே. 110

பதித்துவைத்துத் தியெரித்து அவித்துக்கொண்டு
பாங்கான பக்குவத்தில் புதுப்பாண்டத்தில்
பதித்துவைத்து நெற்குழியில் பத்துநாள்வை
பசுவினிட தொழுவத்தில் பத்துநாள்வை
பதித்துவைத்துப் பழந்தன்னைத் தினமொன்ருகப்
பத்துநாள் கொள்ளப்பா பாண்டுபோகும்
பதித்திருந்த வாதநீர்ப் பாண்டானலும்
பறக்குமடா பறக்குமடா பாண்டெல்லாமே. 111

எல்லாரும் வயித்தியன்போல் நோவுபார்த்தால்
இளைத்தகதுவோ நோயப்பா வேளைமாண்பர்
வல்லாரும் வாதிமகன் வயித்தியனுவான்
மற்றவர்கள் நோயறியா மடையரப்பா
கொல்லுமடா கெந்தகத்தை வாங்கிநீயுங்
கூட்டிடுவாய் சமனின்ற விடந்தீஞ்சானைக்
கல்லானி கெந்தகமாஞ் சாமமொன்று
காணப்பா அரைத்துவில்லைக் கட்டிப்போடே. 112

கட்டியடா அஞ்செருவிற் புடத்தைப்போடு
கலங்காத கெந்தகந்தான் என்னசொல்வேன்
வெட்டுமடா குஷ்டமொடு கிரந்திகூளை
வெல்லுமடா சூதபற்பங் கூட்டித்தின்னு

பட்டுவிடு மேகநீரா மேகசூலை
பறக்குமே மேகத்தி லெழுந்தவாய்வு
திட்டமடா பத்துநாள் கொள்ளும்போது
சித்தியடா கற்பத்துக் குறுதிகாணே. 113

## வெண்கலச் செந்தூரம்.

உறுதியென்ற வெங்கலச் செந்தூரங்கேளு
உத்தமனே வெங்கலந்தான் பலந்தானென்று
அறுதியென்ற சிலாசத்து பலந்தானென்று
அண்டத்தோல் பலமொன்று குடிலமொருபலந்தான்
விறுதியென்ற வீரமது பலந்தான்ரெண்டு
வீரான தாளகந்தான் பலந்தான்ரெண்டு
பொறுதியென்ற கெந்தகந்தான் பலந்தானாறு
போட்டரைப்பாய் கலவத்தில் பழச்சாற்றாலே. 114

பழச்சாறு விட்டரைப்பாய் மூன்றுநாள்தான்
பாங்காக வில்லைசெய்து ரவியில்காய்ந்தால்
வழைச்சல்லோ போட்டுதடா மாட்டிக்கொண்டு
வாராகபுட மானல்லோ செந்தூரந்தான்
இழைச்சல்லோ வெல்லத்திற் குன்றியிடைகொள்ள
என்னசொல்வேன் குன்மங்க ளெட்டுந்தீரும்
தழைச்சிருந்த மேகத்தி லெழுந்ததெல்லாந்
தவறுண்டே போகுமடா சார்ந்துபாரே. 115

## முத்துச்செந்தூரம்.

பாரப்பா முத்துமணிப் பலந்தானொன்று
பதைப்படங்கா நாகமது பலந்தானொன்று
சேரப்பா சூதமொடு பலந்தானொன்று
சிறப்பான வீரமொடு பலந்தானொன்று
வாரப்பா முலைப்பாவி லரைப்பாயோர்நாள்
வாகாக வில்லைசெய்து ரவியிற்போடு
வேரப்பா பூக்கழஞ்சி கெந்தகந்தான்
விளங்கவே ரெண்டுபலங் கூட்டியாட்டே. 116

ஆட்டியே புடம்போடு கோழியப்பா
ஆகாரா முத்துமணிச் செந்தூரந்தான்

நாட்டவே கிரந்தியுறும் யோனிப்புற்றும்
நல்லிலிங்கப் புற்றுடனே கண்டமாலை
முட்டவே மூலங்கள் பிளவையரையாப்பு
மூக்கினுள்ளே சதைத்துணுக்காம் பீனிசங்கள்
காட்டவே செந்தூரங் கண்டபோதிற்
காணப்பா கெடிகலங்கி யோடுந்தானே. 117

## தாளகச் செந்தூரம்.

தானான தாளகந்தான் பலந்தானென்று
சம்பழத்தின் சாறுபடி சுருக்குப்போட்டு
வேனான முலைப்பால்கால் படியேதாக்கு
விளங்கவே யூறலுறும் பின்புகேளு
வானான திருகுகள்ளிப் பால்தானாழி
வாங்கியதிற் போடுகிற மருந்துகேளு
கோனான திருகுகள்ளி உப்புபூவுங்
கொடியநவாச் சாரமொடு வீரந்தானே. 118

வீரம்பூரத்துடனே வெடியுப்புச் சீனம்
விளங்கவே வகையொன்று கழஞ்சியொன்று
சேரவே பொடித்தந்தப் பாலிற்போடு
சிறப்பாக மூன்றுநாள் செலமதாகும்
நீராலே தாளகத்திற் காரங்கால்தா
னிறுத்துவிடு முன்சொன்ன பலவிதத்திற்
சாரமது கால்பலந்தான் கூட்டிக்கொண்டு
சாகவே யரைத்திடுவாய் மூன்றுநாளே. 119

நாள்மூன்று அரைத்துவில்லைப் பணம்போற்றட்டி
நவமாகச் சுத்திசெய்வாய் தாம்பிரத்தைக்
கோள்மூன்றாய் தீருமப்பா லூரல்வாங்கும்
கூறுவேன் அண்டத்தோல் பலந்தானென்று
கேள்மஞ்சள் கட்டான வளையலோடு
கெடியான வெடியுப்புக் காரஞ்சாரம்
பாள்காணுப் பூவீரம் பூரஞ்சீனம்
பாங்காக வகையொன்று கழஞ்சிரெண்டே. 120

ரெண்டுடனே யண்டோடு கூட்டிக்கொண்டு
நிரையாகப்பழச்சாறு அரைப்படிதான் விட்டாட்டிக்
கொண்டுடனே வில்லைசெய்து உலர்த்திக்கொண்டு
கொடுத்திடுவா யொவ்வாத ரசிக்கேதான்

பண்டுடனே தாம்பிரமது பலந்தானஞ்சு
பாங்காக குகைக்குள்ளே உருகும்போது
தண்டுடனே தாம்பிரத்திற் பிலத்தசுத்த
சண்டாள வூரலறுந் தாம்பிரந்தானே. 121

தானன்றாய்ச் சுத்திசெய்து தாம்பிரந்தன்னைத்
தடையறவே மறுகுகையி லுருக்கும்போது
வனென்ற தாளகத்தின் மெழுகுவில்லை
இயைந்திடுவா யொவ்வொன்றாய்க் கொடுத்தபின்பு
தேனென்ற நிறம்போச்சு வெங்கலம்போலாகும்
திடமாக வடித்துடனே தகர்த்துதூளாம்
பானென்ற கலவத்தில் பொடித்துங்கொண்டு
பாங்காகக் கண்டிடைக்குச் சூதம்வாரே. 122

சூதத்தி னிறைபோடு வீரந்தன்னைத்
துடியாக முலைப்பாலி லரைத்தபின்பு
நாதமென்ற பூநீறு ரெண்டுபத்துக்கொன்று
நாட்டியரை மூன்றுநாள் பின்புகேளு
பாதமென்ற வாலரசமட்டைப் போலாம்
பண்பாகக் கண்டிடைக்கு கெந்திகூட்டி
நீதமென்ற டோற்றலையின் சாற்றாலாட்டி
நிலைத்திடுவா யன்பதெருப் புடத்தைப்போடே. 123

புடத்திலே யிருந்துறைக்க செந்தூரந்தான்
பேசாதே வயிரவர்க்குப் பூசைபண்ணு
திடத்திலே தாம்பிரத்தின் செந்தூரத்தைத்
தினக்குன்றிப் பிரமாணம் திறிகடுகிற்சேர்ந்து
நடத்திலே மண்டலந்தான் உண்ணும்போது
நாளான பீலிகையுங் குன்மத்தோடே
சடத்திலே உண்டான கனப்புவாய்வு
சாங்கமாய் தீர்க்குமடா தாம்பிரந்தானே. 124

தாம்பிரசெந் தூரத்தை தின்னும்போது
தட்டுண்டு குன்மம்போ மனுபானங்கேள்
காம்பியே புளித்திருந்த காடிபடியொன்று
கண்டங்கத் திரிச்சாறு படிதானென்று
தேம்பியதோர் திருமேனிச் சாறுபடியொன்று
சிறுசெருப்புக் கால்சாறு படிதானென்று
வேம்பினிட பட்டைச்சாறு படிதானென்று
மேலான கையான்சாறு படிதானென்றே. 125

துன்றான விஞ்சிச்சாறு படிதானென்று
உத்தமனே பசுமலையின் பட்டைதன்னை

நன்றாக வெண்படிநீ ரொருபடியிற்காச்சி
நலமான இயாழமிது படிதானென்று
மன்றாகப் பிரமிச்சாறு படிதானென்று
வாகாக விதுவெல்லாந் தாளிக்குள்ளே
சென்றாட வொன்பதுசா ரொன்றுய்சேர்த்துச்
செப்பக்கேள் பனைவெல்லம் சேரப்போடே. 126

போடக்கேள் மூன்றுபத்து பலந்தான்போடு
புகழான வெள்ளெருக்கம்வேர்ப் பச்சைப்பட்டை
ஆடப்பா பலமொன்று அரைத்துக்கொண்டு
அப்பனே அன்பதுக்காய்க் கச்சல்வாங்கி
சூடப்பா நன்றாக நறுக்குத்தட்டி
சுகமாக அரைத்திடுவாய்ப் பிசின்போலாகத்
தேடப்பா விருமருந்துஞ் சாற்றினோடே
சேர்த்துநீ கரைத்திடுவாய் செப்பினேனே. 127

செப்பினேன் உனக்காகப் புலத்தியனேஅய்யா
தீராத குன்மமெல்லாஞ் சேரத்தீரும்
செப்பினேன் சோதிநீர் பலந்தானென்று
திரைநுரையின் நீறுபலஞ் சங்குநீறு
செப்பினேன் பலமொன்று பூநீறப்பா
சேரவே யிதுவெல்லாஞ் சுட்டசுண்ணஞ்
செப்பினேன் திரிகடுகு வாய்விளங்கந்
திப்பிலிமூ லத்தினொடு சித்திதானே. 128

சித்திரமூ லத்தினொடு கடுகுவோமம்
செவ்வியங் கோஷ்டமதூஞ் சீரகந்தான்
முத்திரையாங் காயமொடு வசம்புகாந்த
முழுந்தவே வகையொன்றுக் கரைபலந்தான்சேரு
சத்தியெவாச் சாரம்நவாச் சாரம்சீனம்
சவுக்காரம் பொரிகார மிணங்கன்சூடன்
பத்தியாய்க் கொடிக்கழற்சிப் பருப்பிந்துப்பி
பாங்கான கல்லுப்புப் பாதிசேரே. 129

பாதியாம் வகையொன்று காற்பலந்தான்கூட்டிப்
பண்பாகச் சரக்கெல்லாம் சூரணித்துக்கொண்டு
நீதியாங் கருவேம்பி னிலையைவாட்டி
நேராகச் சூரணித்து மருந்திற்சேர்த்து
சாதியாஞ் சாரெல்லாம் பாகுசேரில்
தக்கவொரு சூரணத்தை யதிலேபோட்டு
கோதிடுவாய்த் தேனுமொரு படிதான்வாரு
கூறான நெய்யுமொரு படிதான்வாரே. 130

வாரப்பா மெழுகுபத மானவாறே
வாய்ப்பாகப் பீங்கானில் வழித்துவைப்பாய்
சேரப்பா லேகியந்தான் கழஞ்சியள்ளிச்
சிறப்பாகத் தாம்பிரச் செந்தூரத்தைச்
சாரப்பா குன்றியிடை யாகக்கொள்ள
சாந்தமாம் புகையிலையும் புளியுந்தள்ளு
வோப்பா அஷ்டகுன்ம மெட்டுந்தீரும்
வெகுசுறுக்கு நவசிந்தா மணியென்றேனே. 131

## நவசிந்தாமணி.

நவசிந்தா மணியான லேகியத்தை
நல்லதொரு கற்பசிகதிக் காகச்சொன்னேன்
புவனங்கள் திரிந்தலையும் வயித்தியனேகாண்பான்
புத்தியுள்ள வாதிமகன் குன்மந்தீர்ப்பன்
எவராலுந் தாம்பிரத்தைச் செயிக்கமாட்டார்
இந்தவகை லேகியமுஞ் செய்யமாட்டார்
அவன்பிழைப்புக் கேதாலு மொன்றைச்செய்வா
னுகாதவயித்தியனு மாமென்றேதே. 132

ஓதினேன்தீட்சையிரு நூற்றுக்குள்ளே
யுத்தமனே வடுகனுட பூசைமார்க்க
மாதியாம் வயித்தியனுக் கப்பாகேளு
அவனன்றிச் செந்தூரமாகாதொன்றுஞ்
சாதியாம்ருத்திரசென் மத்தோர்க்கன்றிச்
சகலருசகும் பலியாது தவறுண்டேபோம்
வாதியாமகன்றனுக்கு வயித்தியமுஞ் சொன்னேன்
வயிரவனைப் பூசைபண்ணி வணங்கிப்பாரே. 133

## அயக்காந்தச்சேந்தூரம்.

பாரப்பா அரைப்பொடிதான் பலந்தானென்று
பரிவான காந்தமது பலந்தானென்று
சேரப்பா கெந்தகந்தான பலந்தானென்று
திரமான பூநீறு கழஞ்சியொன்று
காரப்பா பழச்சாற்று லிரண்டுசாமங்
கடுகவே யறைத்துவெய்யிற் காயப்போட்டு
ஆரப்பா மறுநாளும் ரெண்டுசாம
மடங்கவே யரைத்துவில்லைக் காய்ந்தபின்பே. 134

பின்பதனைச் சுடுசெங்கல் குகைக்குள்வைத்துப்
பேசாமல் மேலுமதால் மூடிக்கொண்டு

வின்பதனைச் சிலைமண் தான் ரெண்டுசெய்து
விதமாக முட்டளவு குழிதான்வெட்டி
அன்படுதருக் குள்ளே தான் புடத்தைப்போடு
ஆறியபின் னெடுக்கச்செந் தூரமாகுந்
துன்பமது கற்பத்தாற் சூடுகொண்ட
தோலோடு அஸ்திமுதற் கனப்பும்பாரே. 135

கனத்திருந்த நீர்தோஷங் கபாலவாய்வு
கண்புகைச்சல் காதுமந்தங் காணுதோடு
மனத்துறவே சாதிக்காய் சாதிபத்திரி
மதுராஞ்சீரகமோ மம்குரு சானியோடு
இனத்திருந்த வாய்விளங்கம் நறுக்குமூல
மேலமதி விடையமொடு காயஞ்சுக்கு
தனத்திருந்த திப்பிலியு மிளகுங்கூட்டிச்
சதிரான அபின்கோஷ்டந் தானொன்றுமே. 136

ஒன்றான மருந்தெல்லாம் வகைக்குக்கேளு
உறவாகப் பலமொன்று வறுத்துக்கொண்டு
நன்றாகச் சூரணித்துப் பின்புகேளு
நாலுபலம் பனைவெல்ல மெள்ளுஞ்சேர்த்துக்
குன்றாம லிடித்ததனை மையாய்ச்சேர்த்துக்
கூட்டப்பா சூரணத்தை ஏகித்தேதான்
சென்றுடும் நறுந்தேனைக் கால்படிதான்விட்டுச்
சிறக்கவொரு பீங்கானி லடைத்துவையே. 137

அடைத்துவைத்த மருந்தப்பா கழஞ்சிரெண்டு
அயக்காந்தச் செந்தூரங் குன்றிகூட்டி
யிடைத்துவிடு மண்டலந்தான் தின்னுதின்னு
யெளிதல்ல ஆறுவகைக் கிருணியெல்லாஞ்
சடைத்தங்கே யோடிப்போம் புவியுள்ளோர்க்குத்
தாக்கினுற் புளியோடு புகையிலையுமாகா
உடைத்துவிடு முதாத்தில் நின்றவாய்வு
ஒமுடிந்து போகுமடா உண்மைகாணே. 138

## வெள்ளீயச்சேந்தூரம்.

காணப்பா வெள்ளீயஞ் சுத்திசெய்து
கசகாம லுருக்கியே கல்வத்திட்டு
பூணப்பா வெடியுப்பு ரோமப்பூவும்
புகழாகப் பலத்துக்குக் கழஞ்சிவீதம்
தோணப்பா ராசிவங்கம் பலந்தானொன்று
துடிகொண்ட கெந்தகந்தான் பலந்தான்ரெண்டு

நாணப்பா பழச்சாற்று லிரண்டுசாமம்
நன்றாக வரைத்துவைப்பா யெருக்கம்பாலே. 139

பாலாலே சாமம்ரெண்டு ஆட்டிக்கொண்டு
பதைப்படங்கா நவச்சாரம் பலமுங்கால்தான்
வாலாசப் பொற்றலையின் சாற்றலாட்டி
மாட்டுவாய் சாமம்ரெண்டு மடங்குமப்பா
சேலாக வில்லைசெய்து ரவியிற்போடு
திரமாக மூன்றுநாள் காய்ந்தபின்பு
காலாக நூறெருவிற் புடத்தைப்போடு
கைமுறையாய் ராசிவங்கங் கனகந்தானே. 140

கனகந்தான் ராசிவங்கச் செந்தூரத்தைக்
கைமுறையா யெட்டிலொன்றுஞ் சூதங்கூட்டிக்
கனகந்தான் றேகமப்பா சீனியிற்கொள்ளக்
கண்துலங்குங் கபாலபுற்றுக் கபாலவாய்வு
கனகந்தான அஸ்தியிலே பாய்ஞ்சவேட்டைக்
கமல குன்மமோடு கண்டமாலைக்
கனகம்போ னுறைந்திருந்த நோய்களெல்லாங்
காணாதே கடல்புக்குங் கருத்துள்ளோர்க்கே. 141

கருத்துறவே வாதிமகன் வயித்தியஞ்செய்தால்
கதிகெட்ட நோயாளி பணியவேணும்
கருத்துறவே மருந்துக்குப் பத்தியம்வேணுங்
கைமுறையாய்ச் செய்கின்ற வைத்தியர்க்குக்
கருத்துறவே மனதுவா நடக்கவேணுங்
கழுதைபோலே யிருந்தால் பலியாதொன்றுங்
கருத்துறவே யிதுக்கல்லோ சித்தர்சாபங்
சட்டினார் மனதுவா நடந்துக்கொள்ளே. 142

நடந்துக்கொள்ளே நோயாளி ராசாவென்றால்
நாடினு லவர்க்கங்கே மருந்தேறாது
துடர்ந்துகொள்வே னென்றுன்னைப் பத்திவைத்தால்
சுறுக்காகத் தீருமடா சாபமேது
அடர்ந்துபோ யவன்வாசல் கர்த்தாயானால்
அவனுக்குக் கொஞ்சம்போ லுபசாரஞ்செய்யான்
சடந்தனக்கு நோய்வந்தால் குருவேயென்பான்
சாதுரிய மாய்த்தீர்ந்தால் தம்பியாமே. 143

தம்பியென்பான் நோயெல்லாந் தீர்ந்தபின்பு
தாய்தந்தை குருவென்பான் நோய்தீராமுன்பு

வெம்பியதோர் மனமாகி வயித்தியனைப்போற்றி
வேணபடி யுபசாரம் பின்பாகட்டென்பான்
கும்பியல்லோ கொதிக்குதென்று வுள்ளம்நொந்து
கொண்டங்கே வயித்தியனர் கூர்மைக்கேதான்
கம்பியே முகம்வாடிற் சாபம்வேறே
சாத்தினே னிதுவறிந்து மருந்துவாங்கே. 144

வாங்கியே விசுவாச மாகக்கொண்டால்
மருந்தென்ன வயித்தியன்கைப் பட்டாற்போதும்
ஏங்கியே திரியாதே வயித்தியசாப
மேகிடவே சாபத்தினி விர்த்திகேளு
ஓங்கிவியோம் விந்துவுட னுதங்கூட்டி
உறவாகச் சிங்கென்று ஒருலெட்சந்தான்
பாங்கியே வடுகனுட சாத்தியர்தான்
பார்பிரமன் மாயனொடு பகரக்கேளே. 145

வைத்திய முறைமை.

கேளப்பா வயித்தியர்தான் சொன்னபடிகேட்குங்
கெடியாகச் சித்தருட மறப்பையெல்லாம்
வாளப்பா வெளியில்விட்டேன் வயித்தியத்துக்காக
மாநிலத்து நோயாளி மயங்காமலய்யா
கோளப்பா வாராமற் சாபகோபங்
கூறினேன் வாதிமகன் வயித்தியனுகில்
தேளப்பா கொட்டுதல்போல் பூவினீறு
சேராட்டல் செந்தூரஞ் சேரப்போச்சே. 146

போச்சுதென்று மலையாதே சொல்லக்கேளு
புகழான பூநீறு பலந்தானென்று
காச்சென்றேன் சுத்தசலந் தன்னிற்காச்சிக்
காச்சுவது கடுவெய்யில் நீரேவற்றி
வாச்சென்றே யிருக்கும்பூ மாதளங்காய்
மகத்தான பூவப்பா விந்தச்சுன்னம்
பாச்சென்றேன் நிலவுப்பு பந்தச்சுத்தி
பண்ணப்பா பாறையுப்பு மந்தப்பாங்கே. 147

பாங்குடனே முப்பூவும் வெடியுப்போடு
பழிகாரச் சூதனொடு அஞ்சும்நேராய்
வாங்கியே கிழிஞ்சியுட சுன்னந்தன்னை
வரிசையாய்ச் சமபாக மாகவாட்டித்
தாங்கியே வெள்ளெருக்கம் பாலுவார்த்துச்
சாரமாம் பழச்சாறுந்தான் வெவ்வேறே

யோங்கியே யிருசாமம் ரெண்டுநீரு
முத்தமனே யரைத்துவில்லை ரவியிற்போடே. 148

போடப்பா பத்துநாள் காய்ந்தபின்பு
புகழான சுண்ணம்பு பொடிக்குள்வைத்து
சூடப்பா கமலம்போல் தீயைமூட்டித்
துடியாக விருசாமஞ் சேரநீரும்
மாடப்பா விதினுட்டுச் செந்தூரத்தாட்டு
வடங்காத நோய்களெல்லா மகலுறுபோகுந்
தேடப்பா சிப்பியுட சுன்னஞ்சொல்வேன்
திரமான பூநீற்றின் குருவதாமே. 149

## கிளிஞ்சிற்சுன்னம்.

குருவாகுங் கிளிஞ்சியுட சுன்னமப்பா
கூறக்கே ளுமைதன்னைச் சுன்னம்பண்ண
தருவாகுங் கற்சுன்ன முவருக்கூட்டிச்
சாதகமாய்ச் சுத்தசலந் தன்னிலேதான்
திருவாக கரைந்ததிலே கிளிஞ்சியிட்டுத்
தீயெரிப்பா யிருசாமஞ் சென்றபின்பு
அருளான வுமைதனைப் பேசப்பண்ணி
ஆச்சரியம் உன்மருந்து பூச்சக்கேளே. 150

பூச்சப்பா வீரமொடு சூடன்சீனம்
புழுகுனவாச் சாரமொடு கல்லுப்போடு
வீச்சப்பா வகையொன்று பலந்தானென்று
மீறியதோர் கிளிஞ்சிபது பலந்தான்பத்து
ஆச்சப்பா மருந்தெல்லா மரைக்கும்போது
அண்டத்தின் நீறுபலம் ரெண்டுபோடு
தீச்சப்பா பழச்சாற்றி லரைத்துக்கொண்டு
சிறக்கவே யுடன்பூசிப் புடைத்தைப்போடே. 151

புடம்போடு நூறெருவில் பிலத்தசுன்னம்
பின்பொருக்கால் வெண்கருவா லரைத்துலுது
திடமாகச் சுறுக்கிட்ட சுன்னமாகுஞ்
செய்கின்ற கைமுறைக்குச் சோமபலாகா
நடமாட வெளுக்குமட்டும் வெண்கருவாலாட்டி
நாலாறு புடம்போடு கடியசுன்னம்
உடனுடு சத்துருவா மண்டநீறும்
உற்றதொரு கிளிஞ்சிதன்னை மடக்கலாச்சே. 152

மடக்குமடா புலத்தியனே யுனக்குச்சொன்னேன்
வரிசையா யண்டமது பத்துவாங்கி

கிடக்குமடா பாண்டத்துள் பீங்கான்வைத்து
கெடியாக வதிவிட்டுப் பழத்தின்சாறு
கடக்குமடா படியொன்று அழுங்கவாரு
கடுங்காரச் சீனமது கழஞ்சிரெண்டு
அடக்குமடா பொடிசெய்து வதிலேபோடு
அஞ்சுநாள் கடுவெயிற்கு ளண்டநீறே. 153
அண்டத்தின் தோடெல்லாம் உருசிச்சாற்றி
லப்பனே உறைந்திருக்கு மெடுத்துக்கொண்டு
அண்டத்தைச் சவ்வுடனே யெறிந்துபோட்டு
அழகான பழச்சாறு சீனத்தோடு
பிண்டத்தைக் கொல்லுவே னென்றுசொல்லி
பேரிட்டு மூன்றுநாள் ரவியில்நீறும்
அண்டத்தி னீறுதனைக் கலவத்திட்டு
அதிகாரி யெருக்கம்பா லதனிலாட்டே. 154
ஆட்டுவா யிருசாமம் வில்லைசெய்து
அப்பனே ரவிமுகத்திற் காய்ந்தபின்பு
மூட்டுவா யைம்பதெருப் புடத்தைப்போடு
முக்கியமாய் நீறும்பின் னெடுத்துக்கொண்டு
நாட்டுவாய் பத்திலொன்று வீரங்கூட்டி
நலமான வெண்கருவா லரைப்பாய்சாமம்
பூட்டுவாய் வில்லைசெய்து ரவியிற்காய்ந்தால்
புடமொன்று ஐம்பதெருக் குள்ளேபோடே. 155
போட்டெடுத்த அண்டத்தும் பொலிந்துநீறும்
போக்கோடே யித்தவகை யாருஞ்சொல்வார்
தாட்டிகமா யூமைதனைச் சண்ணிநீத்துஞ்
சனவட்டக் குருவல்ல அண்டவித்தை
மாட்டவே வாதத்தி லேறுஞ்சுண்ணம்
வளமாக நவாச்சாரம் சமனுய்க்கூட்டி
மூட்டிலே கொண்டங்கப் பனியில்வைக்கநீராம்
முறையோடு ஏறுதற்குத் தூருசிமுந்தக்கொல்லே. 156
கொல்லுமடா அண்டநீர் கோபமெத்த
கொடும்பாலி யுபசாத்தி லாதிச்சுன்னங்
கொல்லுமடா சிப்பிதனைக் கொன்றுற்கேளு
கூறுகிற சிப்பிவித்தை தொலையாதப்பா
கொல்லுமடா சிப்பிசுன்னத் தாலேகேளு
கொத்தான சவுக்காரம் செய்யும்போது
கொல்லுமடா பூநீறு கல்உப்பைத்தான்
கூசாமற் பாறையுப்பைக் கொல்லுந்தானே. 157

தானென்ற சவுக்கார மேதாலாச்சு
தருவாகிக் கறுத்திருந்த நெடியசிப்பி
வானென்ற அண்டத்தி னீரால்சிப்பி
மகத்தான சுன்னமடா ஆதியாதி
வேனென்ற வயித்தியத்தை விள்ளப்போய்த்தான்
வேரான வழலையுறுஞ் சிப்பிச்சுன்னம்
நான்நன்ருய்ச் சொல்லிவிட்டே னிதுபொய்யாது
நலமான அண்டத்தாற் சிப்பிநீறே. 158

அண்டத்தில் சிப்பிதன்னைச் சுன்னமாக்கி
அரகரா சவுக்காரம் செய்வாயாகில்
தெண்டனிட்டு வாதம்வந்து முன்னேகாணுஞ்
செப்பினேன் புலத்தியனே செப்பக்கேளு
கண்டதொரு குருவென்பாற் பூத்தானென்பார்
கைமுறையாய்க் காணுர்கள் கழுதைமாண்பர்
விண்டதொறு பூநீறுஞ் செய்யமாட்டார்
விளங்கவே சொல்லிவிட்டேன் வேதைபாரே. 159

பாரப்பா சட்டைமுனி பூநீற்றுவித்தை
பாடினுர் பூவதனைக் குருப்பண்ணுமற்
கூறப்பா சொல்லுகிறேன் பூநீருகக்
கொடியதொரு சிப்பிசுண்ணம் பலந்தானென்று
சேரப்பா சோடசத்தின் குருத்தானன்றி
செகமறியாப் பூநீறு செப்பக்கேளு
சாரப்பா முதற்றீட்சைப் பூசைக்கேளு
சாதகமாய் நாலுபலம் தாக்கியாட்டே. 160

தாக்கிடாய் நிலவுப்புப் பாறையுப்புத்
தன்னேடு வகையொன்று பலத்தில்பாதி
தாக்கிடா யுப்புக்குப் பாதிவெள்ளை
சவ்வீரம் வெள்ளைக்கு நாலிலொன்று
தாக்கிடாய் சூடனங்கெ பலமுங்கால்தான்
தயவான புழுகதிலே கழஞ்சிகூட்டு
தாக்கிடாய் வண்டரிசி கழஞ்சிகூட்டிச்
சாதகமாய் மருந்துஒக்க அரைத்துக்கேளே. 161

அரைத்திடுவாய் சாமமொன்று பழச்சாற்ருலே
அப்பனே யெருக்கம்பால் சாமமொன்று
அரைத்திடுவாய் வெண்கருவால் சாமமொன்று
அதியதொரு கடுங்கார மெத்தவேண்டாம்
அரைத்திடுவாய் வில்லைசெய்து ரவியிற்போட்டு
அப்பனே பட்சமொன்று காய்ந்தபின்பு

பரைக்காதி சிவபூசைப் பாங்காய்ப்பண்ணு
பரிவாகச் சுண்ணத்தி லெரித்திடாயே. 162

எரித்திடுவாய் முத்தியு மூன்றுசாமம்
என்னசொல்வே னுதிகுரு வானவாறு
தரித்திரம்போம் வாதம்உள்ளாஞ் சவுக்காரமென்ன
தாளிப்பார் தாளிப்ப ரெண்ணெவாங்க
எரித்திடுவாய் வாட்டிடுவார் வறுப்பார்கோடி
யிதமாகப் புடத்தினிலே வைப்பார்கோடி
பெருத்ததொரு வித்தையிது சித்தர்க்காகும்
பேசாதே உலகத்தோர் பிழைக்கும்வாறே. 163

வாறான உவர்ப்பூவை குருவாய்ச்செய்ய
மாட்டினேன் சவுக்காரம் வழலைகொக்குந்
தேறான பூவினுட குருவைக்கொண்டு
செயநீரே செய்துகொண்டு உப்பைக்கட்டி
வீறான வுப்பாலே சூடன்கட்டி
வேதைகண்ட மார்க்கமடா விளங்கிப்பாரு
நீறான துறைமுகமோ கோடாகோடி
நிலைத்துநின்ற கட்டினமோ கோடியாமே. 164

ஆமப்பா விந்தாதி குருவினாலே
அடங்காத தொழிலப்பா அமைக்கப்போகா
தாமப்பா சட்டமுனி ரெண்டுகொண்டஞ்
சாற்றியதோ ராயிரத்திற் குருப்பூநீறு
வேமப்பா விக்குருவைக் கொண்டுதானும்
வேருமட்டுந் தூருமட்டும் வினவினாற்கொள்
தாமப்பா சாக்கெல்லாம் வேதையோடுஞ்
சட்டமுனி ஆயிரத்தின் சார்வுகாணே. 165

காணப்ப கைமுறைக்குச் சட்டநாதர்
கருத்துறவே சாஸ்திரத்திற் காட்டினார்கேள்
பூணப்பா ஒருதுறையோ கோடாகோடி
பொன்னோடு வெள்ளிவித்தை ரெண்டும்நேரே
கோணப்பா தோணுமட்டுந் துறையோகோடி
சூட்டினா ரதுகண்டு தோணிப்பாரு
ஊணப்பா வதிலிருந்தூன்றிவாத
முற்றுப்பார் தவறாதுஒன்றுந்தானே. 166

ஒன்றான வயித்தியத்தின் குருவுஞ்சொன்னேன்
ஒகொகோ வாதத்தின் குருவுஞ்சொன்னேன்
ஒன்றான மூதண்ட லேகியத்தை
உணர்வாக சொல்லிவிட்டேன் தீட்சைக்குள்ளே

ஒன்றான பூசைவிதி செய்யுங்கால
  முறவாடு மறைக்கழஞ்சி உள்ளேகொள்ள
ஒன்றான நினைவாலே ஒளியைக்காணு
  முற்றுப்பா ராறுமங்கே ஓடியேறே. 167

ஏறடா குளிகைலிட்டுக் கற்பங்கொண்டு
  யிருக்கையிலே உட்பசந்து பெருத்துநொந்து
தேறடா தேகமெல்லாம் வெளுப்புக்கண்டு
  சிந்தையிலே துயாமாய்த் தசைநீர்விம்மி
மாறடா தசைவீங்கி மயக்கமானல்
  மறுபடிதான் குட்டநிற மாறிப்போக
வீறடா சொல்லுகிறேன் சாதிலிங்கம்
  விளங்கவே பலமொன்று வாங்குவாங்கே. 168

வாங்கிடுவா யரைப்பொடிதான் பலந்தானென்று
  வளமான வீரம்பூக் காராசாரந்
தாங்கிடுவாய் வகையொன்று பலங்கால்விதஞ்
  சாதிலிங்கத் திடைபோடு தாரஞ்சிங்கி
ஓங்கிடுவாய் வகையொன்று சூதங்கூட்டி
  உத்தமனே பழச்சாற்று லரைப்பாயப்பா
பாங்குடனே யிருசாம மரைத்தபின்பு
  பதைப்படங்கக் குகைக்குள்ளே பதித்துவையே. 169

வையப்பா மேல்மூடிச் சீலைசெய்து
  வரிசையா மஞ்செருவிற் புடத்தைப்போடு
செய்யப்பா வாறினபின் னெடுத்துக்கொண்டு
  திரும்பவுந்தான் குகைக்குள்ளே சேரவைத்து
கையப்பா கருவளையல் வீரங்காரங்
  கைமுறையாற் சாரம்பூ நீறுகூட்டி
தொய்யப்பா அயக்களங்கந் தனக்குநோய்ச்
  சூட்டியே உருக்கையிலே சுத்தமாமே. 170

சுத்தித்த லோகமடா வங்கமாச்சு
  தொடுகுறிபோற் சூதத்தைச் சரியாய்ச்சேரு
மத்திக்க உருகுமடா சூதந்தானு
  மடங்காத சூதத்தை மடக்கிக்கொல்லும்
பத்திதரும் வீரமதிற் சரியாய்ச்சேரு
  பாங்கான வாலோசமாகும்பாரு
அத்திக்கு மூலப்பாலா லாட்டுஆட்டு
  அம்மம்மா செந்தூர மாகும்பாரே. 171

ஆகுமடா கெந்தியது வெட்டிப்பிட்டு
அப்பனே பொற்றலையின் சாற்றாலாட்டிச்
சாகுமடா மூன்றுநா ளரைத்தபின்பு
சாத்தடா சிவக்குமட்டும் புடத்தைப்போடு
பாகுபெறும் குக்குடமாம் புடத்துக்கேதான்
பறக்குமப்பா பதினெட்டுக் குட்டமெல்லா
மேகுமடா கெந்தியது சூலமேகம்
என்சொல்வேன் குன்றியிடை யிதமாய்க்கொள்ளே. 172

துளசிலேகியம்.

கொள்ளவே சொல்லுகிறேன் துளசிதன்னைக்
கூறுகச் சாறுபலம் ஒன்றுவாங்கி
அள்ளவே பனைவெல்லம் பலந்தானாலு
அதிலிட்டுப் பாகுபெறக் காச்சுக்காச்சு
துள்ளவே திறிகடுகு மதுரம்ஓமம்
சுறுக்கான காருகோ லரிசிகெந்தி
வள்ளவே பறங்கியுட பட்டையோடு
வாய்விளங்கம் கோட்டமொடு வகைதானொன்றே. 173

வகையொன்று பலவீதமாக வாங்கி
வாகாகச் சூரணித்துப் பாகிற்கிண்டி
தகையாதே நறுநெய்தான் படிகால்விட்டுச்
சாரமுள்ள தேன்நெய்க்குப் பாதிகூட்டித்
துகையாக மெழுகுபதந் தன்னிலேதான்
தோன்றவே வழித்துவைப்பாய் பீங்கானுள்ளே
பகையான நோய்களென்னும் பதினெட்டுக்குட்டம்
பறக்குமடா லேகியங் கண்பார்க்கு முன்னே. 174

கண்பார்த்துக் கைபார்த்து முகத்தைப் பார்த்துக்
கண்டிதமாய் பண்டிதத்தைக் கருவாய்ப்போடு
விண்பார்த்து மேனும்பாய்த் திரிந்தாலொன்று
மெய்ப்படா தப்பாகேள் விருதுகட்டு
பண்பார்த்து படித்ததனால் வருவதேது
பாசாங்காய்த் திரிந்தாக்கால் வயித்தியமாமோ
பெண்பார்த்து மோகமுற்ற பித்தர்போலே
பிலக்கவே வயித்தியத்தைப் பேணிப்பாரே. 175

பாரப்பா உளுந்துமேல் தோலுபோக்கி
பானையிலே ஊறவைத்துப் பதமேயாகிற்
சீரப்பா பருக்கையதா யாட்டிக்கொண்டு
சிறுகவே காந்தையுட விலையும்நன்றாய்

கூறப்பா அரைத்தபின்பு செண்டும்நோய்க்
  கூட்டியே ரேகித்து நறுநெய்க்குள்ளே
சேரப்பா வெந்தெடுத்த அடையைத்தின்னு
  தின்றபின்பு நெய்யதனைக் குடித்திடாயே. 176

குடித்திடுநீ யப்படியே அஞ்சுநாள்தான்
  கூறக்கேள் நாளொன்றுக் குளுந்துகேளு
திடத்துடனே படியரைக்கால் மூலிநோய்த்
  தின்றிடவே சொன்னேன்கேள் திறத்தைப்பாரு
வெடிப்பிளந்த காலுக்குச் சிப்பிச்சுன்னம்
  விளக்கெண்ணெ நெய்யுடனே நெல்லிக்காயும
அடிக்குதியி லரைத்துநீ பூசிப்பாரு
  அப்பனே மண்டலத்திற் கமலமாமே. 177

நாகச்செந்தூரம்.

ஆமடா நாகத்தின் செந்தூரங்கேளு
  அப்பனே தங்கமது பலந்தானென்று
தாமடா குகைதனிலே யுருகும்போது
  தாக்கடா மனோசிலைதான் பலமதொன்று
வேமடா வெண்கொளுஞ்சி வோால்கிண்டு
  மீறவே நீறிப்போம் மூலிவேகம்
நாமடா கலவத்திற் கொட்டிக்கொண்டு
  ரசத்திலே யலமொன்று வாருவாரே. 178

வாரப்பா கலவத்திற் கூட்டியாட்டு
  மாய்ந்தபின்பு வீரமது பலந்தானென்று
சேரப்பா முலைப்பாலா லாட்டுஆட்டு
  திரமாக மூன்றுநாள் பனியிற்போடு
நேரப்பா கெந்தகந்தான் செட்டிப்பிட்டு
  நேர்மையாய் பொற்றலையின் சாக்ருலாட்டி.
போப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு
  பேதமில்லை குக்கிடமாம் புடந்தானுறே. 179

ஆறுன புடத்துக்குப் பொற்றலையின்சாற்ருல்
  அரைத்தரைத்துப் புடம்போடு சிவக்குமேபார்
பேறுன நாகஞ் செந்தூரமாச்சு
  பெருமைசொல்ல வென்னலே முடியாதய்யா
வாறுன கற்பது கொள்ளும்போது
  வயிற்றிலே யெரிவுகண்டு சிறுநீர்கட்டி
தேறுதே காயந்தான் உலர்ந்துவற்றித்
  தேரைபோலே யிளைத்தால் யெய்யக்கேளே. 180

செய்யவே யென்றுக்கால் சொல்லக்கேளு
திரமான நாகத்தின் செந்தூரத்தை
மெய்பாகச் சொல்லுகிறேன் பணவெல்லத்தில்
மெத்தவே கொள்ளாதே குன்றிகொள்ளு
சையோகஞ் செய்யாதே புளியாகாது
தாம்பூல மாகாது சடத்தினோர்க்கு
பொய்பல்ல மூலத்திலெடுத்த ரோகம்
போகுமடா புலத்தியனே கஞ்சாவாங்கே. 181

கஞ்சாவு மேலமொடு சாதிக்காயுங்
கடுக்காயுஞ் சுக்குடனே வாய்விளங்க
மிஞ்சாம லொடுவடக்கிச் சூரணந்தான்
மிளகோடு திப்பிலியும் நறுக்குமூலம்
மஞ்சளொடு பத்திரியுங் கிராம்புஓமம்
வரிசையாய் குரோசானி சிற்றரத்தைமூலம்
தஞ்சமுற வகையொன்று பலந்தானென்று
சாதகமா லறுத்துச் சூரணித்துவையே. 1 2

சூரணந்தான் கண்டதுக்குப் பாதியெள்ளு
சுகமாக சீனியது என்ளிற்பாதி
கூறல்லோ மருந்தெல்லாம் ஒன்றுய்ச்சேர்த்து
கூர்மையாஞ் சீனியெள்ளுந் துவைத்துக்கொண்டு
வேறேநீ மருந்துகொள்ள வேணுமோசொல்
மீறுகின்ற விம்மருந்து கழஞ்சிகொள்ளே
நீறுன நாகத்தின் செந்தூரத்தை
நிலைக்கஒரு மண்டலந்தான் குன்றிஉண்ணே. 183

உண்ணவே மூலமெல்லா மபானனாலே
யுதானனென்ற வாய்வாலே குளிர்ந்துபோச்சு
கண்ணவே தசவாய்வு யெங்கேபோச்சு
கழிச்சல்போ யிரத்தமெல்லா மெங்கேபோச்சு
அண்ணவே கிறுணியெல்லா மகன்றுபோச்சு
வப்பனே பதினெட்டு குஷ்டம்போச்சு
எண்ணவே அனுபான மறிந்துகொண்டால்
எளிதல்ல பாம்பினுட விடந்தான்காணே. 184

விடமேறிக் கொண்டதுபோல் மெய்யிலுள்ள
வியாதியெல்லாம் பாம்புதனைக் கண்டாலோடுந்
திடமாக நாகத்தின் செந்தூரத்தைச்
செப்பிலார் கைமுறையாற் சொச்சொன்னேன்
வடாராது கருவங்கங் கட்டிக்கொண்டு
வைப்பேசெந்தூர மாத்திரைதான் செய்வாய்

படரான வங்கமது சேர்ந்துதானால்
பரியைமுந்திக் கொல்லுமடா பாருபாரே. 185

## வங்கச்செந்தூரம்.

கொல்லுமே தங்கத்தைக் கொல்லுங்கொல்லும்
கொடிதான சூதமது பலந்தானென்று
செல்லுமே செந்திர சந்தனக்குப்பாதி
சேரப்பா வெட்டிலொன்று காரங்கூட்டி
வல்லதொரு மிளகுதக்காளிச் சாறாட்டி
வாகாக விருசாம மறைத்துக்கொண்டு
அல்லவே பூநீறு கழஞ்சிகூட்டி
ஆகாரா வங்கமது பலந்தான்ரெண்டே. 186

ரெண்டான வங்கமது உருகும்போது
நிசமாகப் பணம்போலே வில்லைதட்டி
திண்டாடவேகொடுக்க விழுங்கும்பாரு
சிறப்பாக மருந்தெல்லாந் தின்றால்வங்கம்
கண்டதுண்டோ கண்ணுள்ளே யிந்தக்கட்டுக்
களங்கமடா வங்கமது உருக்கிப்பாரு
திண்டாடுங் கண்விட்டுக் கருகியுள்ளே
சிரணித்துப் போகாது கவுரிகூட்டே. 187

கூட்டப்பா சூதத்திற் பாதிசேர்த்து
கொட்டப்பா கருவங்கங் கட்டிப்போச்சு
முட்டப்பா கண்டிடைக்குத் தாளகத்தை
முஸ்திப்பாய் சுத்திசெய் தெடுத்துக்கொண்டு
காட்டப்பா வங்கமது உருகும்போது
கட்டுமால் தேவிதனைப் பொடித்துப்போடு
பூட்டப்பா நாயுருவிக் காம்பால்கிண்டி
புகழான கர்வங்கம் பொலிந்துநீறே. 188

பொலிந்தவங்கப் கலவத்திற் பொடித்துத்தூளாய்
பூநாக மெட்டிலொன்று யுலர்த்திப்போடு
மெலிந்துவிடு வங்கத்திற் பாதிசூதம்
வீரமதில் வங்கத்திற் சமனுச்சேரு
மலிந்துதப்பா வாலைரச முலைப்பாலாட்டி
வாகாக வாட்டியே பனியிற்போடு
நலிந்துவிடும் பின்பதிலே கெந்திதன்னை
ரெட்டிப்புச் சேர்த்துநீ நாட்டிடாயே. 189

நாட்டினால் பொற்றலையின் சாற்றாலாட்டி
நாலாநாள் வில்லைசெய்து ரவியிற்போடு

ஒட்டிலே வைத்திதனை யோடுமூடி
யுறவாகச் சீலைசெய்து காயவைத்து
தாட்டிகமா யஞ்செருவிற் புடத்தைப்போடு
சாதகமா யஞ்சுதாஞ் சுாற்றுலாட்டி
மூட்டியே கைமுறையாய் புடத்தைப்போடு
மூதண்ட வங்கமது முருக்கம்பூவே. 190

முருக்கம்பூ நிறமென்ன ஒப்போஅல்ல
முக்கியமாம் செந்தூரம் பனைவெல்லத்தில்
திருக்சுறவே குன்றிகொள்ளு மண்டலந்தான்
திரிகடுகு மதூரமொடு சீரகமுங்கூட்டி
யுருக்கமுடன் பாத்திரத்தில் வைத்துக்கொண்டால்
ஓடுமடா மேகமெல்லா மொழிந்துபோகும்
பெருக்கமுடன் வாயுவெல்லா மெங்கேபோச்சு
பித்தமொடு குட்டமெல்லா மொழிந்துபோச்சே. 191

போச்சடா கிரந்தியொடு சூலைதாகம்
புணர்ச்சியொடு விந்துவிலே சென்றவாய்வு
போச்சுதடா வுதரத்தி லுள்ளவாய்வு
பொருமலுடன் மேலேப்பம் புழுக்கல்மூலம்
போச்சுதடா சூசிகா வாய்வுகுன்மம்
பூரணத்தைக் கொல்லவந்த க்ஷயரோகங்கள்
போச்சுதடா பீனிசங்கள் பாலரோகம்
புத்திகெட்ட சித்தர்களே புகலக்கேளே. 192

புகலக்கேள் வங்கமது தங்கமப்பா
பொய்யல்ல கூட்டியதோர் கருவங்கத்தால்
அகிலமெல்லாம் படைத்தளித்த பாத்தின்கூறு
வாகத்திற் குறுதிமெத்த வதனுற்சொன்னேன்
பகிரண்டம் பேதிக்குந் தங்கநீறும்
பண்ணுவது வங்கத்தாற் பரிந்துகாணுஞ்
செகமெல்லாங் கொள்ளாது தங்கபற்பம்
செப்பினேன் புலத்தியனே சேர்ந்துகாணே. 193

## வெள்வங்கச் செந்தூரம்.

காணப்பா தங்கமது பலந்தானென்றி
கடியதொரு குகைதனிலே உருகுப்போது
தோணப்பா சூதமொடு தாரஞ்சிங்கி
சுத்தித்த வெள்ளியம் சாதிலிங்கம்
பேணப்பா வரிதாரம் நிமிளைவீரம்
போரான வெண்காா மெட்டுங்கூட்டி

பூணப்பா வகையொன்று பலமுங்கால்தான்
புகழான பழச்சாற்று லரைத்துக்கூட்டே. 194

அரைத்திடுவாய் சாமமொன்று அப்பாகேளு
ஆகாகா பூநீறு சாரங்கூட்டி
வரைக்கடங்கா நீருகும் நீவிரைந்து
மாட்டுவா யிருசாம மரைத்துக்கொண்டு
நிரைக்கவே குன்றியிடை வில்லைகாய்ந்தால்
நோராக ஒவ்வொன்றாய்க் கொடுக்கவாங்கும்
தரைக்கடங்காத் தங்கமது மருந்தெல்லாமுண்டால்
சாதகமாய்த் தங்கத்தின் களங்கம்போச்சே. 195

களங்கம்போ விருக்குன்ற தங்கந்தன்னைக்
கருவலையல் வீரமொடு காரசாரம்
வழங்கவே பழச்சாற்று லாட்டிக்கூட்டி
வாகாகச் சோதிச்சுப் பின்புகேளு
விளங்கொண்ட வீயமடா தங்கந்தானும்
வேதையிதில் சொல்வதற்கு நாவெழாது
உளம்பெறவே சூதத்தைச் சரியாயூட்டி
உத்தமனே வீரத்தை ஒன்றாய்த்தாக்கே. 196

தாக்கடா ரெண்டுபல முலைப்பாலாட்டுச்
சாதகமாய் பழச்சாறு கூடவாட்டு
வாக்கடா யிருசாம மரைத்தபின்பு
வரிசையாய் கைமுறையாய் பனியிற்போடு
போக்கடா கெந்தக மிரட்டிப்பிட்டு
பூட்டடா தாளகந்தா னுக்கொன்று
யாக்கடா பத்திலொன்று சிலையுமிட்டு
அப்பனே பொற்றலையின் சாற்றாலாட்டே. 197

ஆட்டுவா யிருசாமம் வில்லைசெய்து
வாதித்தன் கண்டபின்புக் குப்பிக்கேற்றி
மூட்டுவாய் மூன்றுநாள் முத்தீயிட்டு
முழங்கவே வயிரவர்க்குப் பூசைபண்ணி
தீட்டுவா யருணனிறஞ் செந்தூரத்தைச்
சிறப்பான பூரணசந்தி ரோதயந்தான்
நாட்டுவாய் சந்திரோ தயத்தைக்கண்டால்
நடுங்குமடா நோய்களெல்லாங் கண்காணுதே. 198

கண்காணு நோயோடு காலன்பாவி
கடைகெட்ட வாங்கார முள்ளேபுக்கி

விண்காணு விந்துவங்கே மேலேயேறும்
　விருதாக மனந்தன்னை யொன்றாய்ப்பண்ணு
முண்காணு வமுதந்தா னுள்ளேபாயு
　மொன்றல்லக் கற்பத்தை யுறுதிபண்ணும்
பெண்ணாகச் சையோகம் பிலத்துதென்றால்
　பேசாமல் கொல்லுமடா பிறநீர்க்கோவே. 199

பிறநீரோ வாம்பலொடு மகோதரந்தான்
　பெருவயிறு நீர்ச்சோகம் பித்தரோகம்
திறமான வாதத்தி லெழுந்தரோகஞ்
　சிலேஷ்பனத்தா லெழுந்ததொரு தோஷந்தோஷம்
வரமான பதினெட்டுச் சன்னிமூலம்
　ஆகாகா குன்மமொடு பீலிகையுந்தானு
முறவான கிரந்தியொடு மேககூலே
　யோனிப்புற் றுட்சிலேக ளொன்றில்லாதே. 200

ஒன்றல்ல சதையிலுள்ள தோஷம்போகு
　முத்தமனே நாம்பிலிற்ற தோஷம்போகு
மொன்றல்ல வபானனின்ற வாயுவாலே
　ஒருகோடி நோயுண்டா மொப்பார்சொல்ல
ஒன்றல்ல உந்தியின்கி ழபானனின்று
　னுடலையெல்லாங் கெடுப்பதற்கு வுள்ளங்கொண்டா
ஞென்றல்ல சினம்போக்கிச் சிவமாய்ச்செய்தால்
　ஓமுடிந்து போமூலத் தபானன்றானே. 201

தானென்ற நோயெல்லா மபானனாலே
　சாற்றுவது பிராணனென்ற வாயுவாலே
வானின்ற திசைபத்தும் உதானனாலே
　வந்துதடா வெழுவாய்வு மிதிலேபுக்கி
வேனென்ற நோயெல்லாம் படைத்துதப்பா
　மெய்விழுந்து போமட்டும் விரோதஞ்செய்யும்
ஏனென்ற பூரணசந்தி ரோதயத்தை
　யெள்ளவு முட்கொள்ள விடைந்துபோச்சே. 202

## சுயமாக்கினி குமாரம்.

போச்சடா சீனியிலே நெய்தான்கூட்டிப்
　புகழான திரிடுகு சீரகமுங்கூட்டிப்
போச்சென்ற நோய்களெல்லாஞ் சேரத்தானே
　புக்குமடா கானமெங்கே கடல்களெங்கே
போச்சடா கற்பத்தால் வந்ததோஷம்
　போகுதடா பூரணத்தைத் தின்றதாலே

போச்சப்பா கற்பங்க ளெல்லாம்பாரு
  பூண்டதொரு சுயமக்கினி குமாரன்போக்கே. 203

குமாரனென்ன வேசுறுக்குக் கொள்கிறேன்கேள்
  குற்றமெல்லாந் தீர்த்திருந்த வயத்தினீயுஞ்
சமானமதாய்க் காந்தத்தி னீயந்தானுஞ்
  சரியாக வகையொன்று பலந்தானென்று
வமாாடு தாளகந்தாட் பலத்திற்பாதி
  யப்பனே கெந்தகம் பலந்தான்ரெண்டு
எமாராய சூதமதைப் பலமுங்கூட்டி
  எலுமிச்சம் பழச்சாற்றால் சாமமாட்டே. 204

ஆட்டுவாய் கற்றாழஞ் சாறுசாமம்
  அப்பனே ரசிதகிண் ணத்தில்வைத்து
மூட்டுவாய் ரவிமுகத்தில் திங்களொன்று
  முடிந்தகுருக் கழஞ்சியத்தில் வீரம்போட்டு
மாட்டுவா யென்சொல்வே னரைக்கும்போதில்
  மகத்தான ரவிமுகத்தி லெல்லாம்தீறும்
சூட்டுவாய் கெற்பநோய் சூலைமேகந்
  தொடுகுறிபோற் குன்மத்தைத் தூரத்தும்பாரே. 205

தூரத்துமடா அக்கினிகுமார னபாஞ்சு
  சொல்லின்வாய் முந்துமுன்பே சுழற்றிவெட்டு
மாத்தினிலே யிரும்புபட வைத்தாப்போலே
  யறுத்துவிடு மகாராச புத்திரந்தான்
சிரத்தினிலே வாய்வேது செலந்தானேது
  தேகத்தில் தசைகளுட வலிதானேது
சுரத்தினிலே மீறுமுறை சுரங்களேது
  துடிக்குமொரு விழிநோய்கள் தொண்ணூற்றாறே. 206

ஆறுவகைக் கிறாணியெல்லா மகன்றுபோகு
  மப்பனே மகோதரத்தை யறுவாங்குங்
கூறுகின்ற குறைநோவு குஷ்டமெல்லாங்
  குடிப்போறே மென்றுசொல்லிக் குமாரனோடே
வேறுமொழி பேசாமல் விரைந்தங்கோடும்
  வெட்டவெளி நோய்களெல்லாம் விழலாய்ப்போகுந்
தேறுமிந்தக் குமாரவர்க்க மார்க்குமில்லை
  செப்பினே னிதுவறிந்து தெளிந்திடாயே. 207

## ஆனந்த வயிரவன்.

தெளிந்திடவே யானந்த வயிரவன்தான்
  செப்பரிது செப்புகிறேன் புலத்தியனே அய்யா

களிந்ததொரு பசுத்தலையின் பாலில்சொல்லிக்
கவுரிலிங்கஞ் சிலைதாரம் தாரகாபி
வழிந்தகெந்தி வீரமொடு சிங்கிதோட்டி
வகையொன்று பலமொன்று மண்டலந்தான்
குளிர்ந்தகுழிப் பெண்ணமுரி கற்றுழம்பால்
கொட்டியரை யெண்சாமம் ரவியிற்போடே. 208

போடப்பா வில்லைசெய்து காய்ந்தபின்பு
புடமென்று பத்தெருவில் மணற்குள்போடு
நீடப்பா நீறியது இடைபோகாது
நேறுகின்ற துத்தமொரு பலத்தைக்கூட்டு
சூடப்பா சூடமொரு யலந்தானென்று
சூட்டியபின் குருக்கழஞ்சி தூக்கிப்போடு
ஆடப்பா விதினாட்டு மகாரசன்னி
யானந்த வயிரவனும் பொன்னூமத்தே. 209

மத்தினுட சாற்றாலே சாமமொன்று
வாகாக மிளகுபோல் உண்டைசெயது
பெற்றதொரு சாம்பிராணிப் புகையிற்காட்டிப்
பெருமையொத்த வெள்ளியுட சிமிழ்க்குள்வைப்பாய்
சத்தியுட சாபத்தை நிவிர்த்திசெய்து
சாதகமாய் வயிரவனைப் பூசைபண்ணி
முத்திபெறுங் குளிகையெல்லாம் முன்பின்பாராய்
முனையென்ற சன்னியெல்லா முறிந்துபோமே. 210

முறிந்துபோங் குன்மமோடு குட்டம்மூலம்
மூலத்திற் கிராணியொடு வானந்தவாயும்
முறிந்துவிடு மானந்த வயிரவனைக்கண்டால்
மோசமடா வென்றுசொல்லி நோய்களெல்லா
முறிந்துபோம் செந்தூர விதங்கட்கெல்லா
முப்பூவின் குருவினுட மூர்க்கமப்பா
முறிந்துபோம் ரசபற்பங் கண்டாலப்பா
மோகமாய்ச் சூதபற்பஞ் சொல்லுறேனே. 211

## சூதபற்பம்.

சொல்லுகிறேன் வெண்முள்ளிப் பழத்தின்சாறு
தோன்றுகண்டங் கத்திரியின் பழத்தின்சாறு
வெல்லுகிறே னீர்முள்ளி காவெள்ளுள்ளி
விளங்கவே குறட்டையுட பழத்தின்சாறு
மல்லுகிறேன் படியொன்று வகையொன்றப்பா
வஞ்சுபத்துப் பலங்கெந்திக் கலவத்தாட்டு

கொல்லுகிறே னென்றுசொல்லுங் கெந்தியைத்தான்
குருவதிலே கழஞ்சியஞ்சு கூட்டிவாட்டே. 212

ஆண்டவே சாறெல்லாம் வற்றவற்ற
ஆச்சரியங் காசுபோல் வில்லைசெய்து
முட்டுவாய் ரவிமுகத்தி லுலர்ந்தபின்பு
முறையோடே சைமுறையாய்த் தயிலம்வாங்கு
நாட்டுவாய் சூதமொரு பலந்தானீயம்
நலமாகக் கலவத்தில் வாருவாரு
கூட்டுவாய் கெந்தியுட தயிலமப்பா
குறையாமற் பலமொன்று கூடவாறே. 213

வாரப்பா குட்டித்தக் காளிச்சாறு
வகையாகப் படியொன்று மாளமாளச்
சேரப்பா தயிலமொடு சூதந்தானுஞ்
சேர்த்தரைக்க மூன்றுநாள் மாண்டுபோகுங்
கூரப்பா குகையிலிட்டுச் சில்லுச்செய்து
குக்கிடத்தில் நீறியது கொடுஞ்சூதந்தான்
பேரப்பா யிதுக்குப்பேர் ரசகற்பூரம்
பெரிதான கிரந்தியெல்லாம் பிறிந்துபோமே. 214

போமடா வாயுவென்ற தெல்லாங்கேளு
புற்றரை யாப்போடுகடி தடத்தின்புற்று
வாமடா லிங்கப்புற்றுச் சூலைமேக
வளவற்ற நோய்களெல்லா மகலுமப்பா
நாமடா புடஞ்சயமாய் ரசகற்பூரம்
நாட்டினே மிதுவன்றிப் பதங்கஞ்செய்வார்
தாமடா கொண்டாக்கால் வாயைக்காட்டுத்
தந்தமபோம் பொறுத்தெல்லாஞ் காருங்காணே. 215

## வயிரபற்பம்.

காணப்பா கட்டுபல மிணங்கள்தேனில்
கைகொண்டு மத்திச்சு வயிரத்துக்குத்
தோணப்பா கவசமிட்டுப் புடத்தில்நீறுஞ்
சுகமாக உட்பூசு குருவையப்பா
வீணப்பா வல்லவிது வயிரபற்பம்
மீறவே சமனுகச் சூதங்கூட்டி
பூணப்பா சூதத்திற் பாதிவீரம்
புழுக்கந்த மிடைப்பாதம் வண்டுகூட்டே. 216

வண்டரிசி சூதத்திற் பாதிகூட்டி
வளமான விந்துவினுல் மாட்டியரட்டு

ரெண்டுநா ளரைத்தபின்பு வில்லைகட்டு
 நேராக உலர்த்தபின்பு புடத்திற்போடு
கண்டவாரர் வயிரத்தைப் பற்பமாகக்
 கடினமடா வயிரமது பற்பஞ்செய்ய
பண்டையிலே யிதனாலே பரியையீற்றிப்
 பரிசனத்தில் வீரமிட்டுப் வேதைபாரே. 217

வேதையாந் தங்கபற்பந் தேனில்குன்றி
 விதமடா மண்டலங்கொள் க்ஷயமெல்லாம்போம்
பாதையாம் வச்சிரத்தால் தங்கமீற்றிப்
 பாசமாய்க் கொண்டுவந்த மார்க்கமப்பா
பேதையாந் தேகமெல்லாம் பொன்போலாகும்
 பிள்ளைகட்குச் செய்திட்டால் பிலத்தகாயந்
தாதையே யமவறுத்துத் தட்டிப்போகுஞ்
 சகலசித்துங் கைவசமாஞ் சாந்துபாரே. 218

பாரப்பா வயிரபற்பம் பனைவெல்லத்திற்
 பாங்காக விருநேர மண்டலந்தான்
சாரப்பா தேகமது வயிரம்போலாக
 தசைமேலே வெடித்தபுண்கள் புள்வையோடு
தீரப்பா பவுத்திரமுகற் கண்டமாலை
 தீராத கடிவிஷங்கள் குஷ்டரோகம்
பேரப்பா வயிரமொன்று கேட்குமுன்பே
 பிறிந்து பாராமலே பிறிந்துபோமே. 219

பிறிந்துபோங் கற்பத்தால் வந்ததோஷம்
 பிழைபொருக்குமோ வயிரக்கண்ணாற்பார்த்தால்
முறிந்தபோ மலக்கட்டு கட்டித்தானால்
 மோசமடா மலக்கட்டுந் தீரச்சொல்வேன்
செறிந்தந்தத் திறிகடுகு ரோகணியிந்துப்பு
 திறிபலை முத்தக்காசு விடையமோமம்
அறிந்துவாய் விளங்கமொடு நறுக்குமூலம்
 அப்பனே வகையொன்று பலந்தானென்றே. 220

ஒன்றப்பா நிலவாகை சூரணந்தான்
 உத்தமனே யரைப்படிதா னுணர்ந்துசெய்து
நன்றப்பா மருந்துடனே யெல்லாந்தூளாய்
 நாட்டினாற் கண்டிடைக்குச் சிவதைகூட்டிச்
சென்றப்பா யேரண்டத் தயிலத்தோடே
 திரமாக லேகியம்போற் செய்துகொண்டு
வென்றப்பா வெருகடிதான் சீனிவாயில்
 விழுங்குவா யினிப்போடே விழுங்குவாயே. 221

விழுங்குவாய் லேகியந்தான் கழஞ்சிரெண்டு
மீறுகின்ற சீதமெல்லா மறுத்துண்டேபோம்
ஒங்கான வேப்பீர்க்குக் கிஷாயத்திற்கொள்
உத்தமனே கிருமியெல்லா மொழிந்துபோகும்
நழுங்காத குடல்வாயு மாண்டுபோகும்
நலமான வபானவாய்க் கடுப்புத்தோன்று
எழுங்காமல் சுத்தியுண்டாம் நிர்த்தோஷம்போம்
இதைப்போலே சுகபேதி வில்லைகாணே. 222

காணப்பா கெந்தகமும் லிங்கம்வீரங்
கட்டாகக் குருவோடு காரசாரம்
பூணப்பா சிலைநாகங் கருநாகவங்கம்
புகழான வெள்ளியொடு சூதந்தாரங்
தோணப்பர தாரசிங்கி யயத்திஞேடு
துரிசிபொன் னிமிளையொடு துத்தஞ்சூடன்
வேணப்பா வகையொன்று பலந்தானென்று
வெண்கருவி லெருக்கம்பால் நீர்விட்டாடே. 223

ஆட்டுவாய் முச்சாம மப்பாகேளு
மையனே முலைப்பால் நீசமாமொன்று
நாட்டுவாய் பழச்சாறு சாமம்நாலு
நல்லதொரு பொற்றலையின் சாற்றினாலே
மூட்டுவா யிருசாம மரைத்தபின்பு
முனையான வில்லைசெய்து ரவியிற்போடு
நீட்டுவா யுலர்ந்தபின்பு குகையில்வைத்து
நிசமாக மேல்மூடிப் புடத்தைச்செய்யே. 224

செய்யடா புலஸ்தியனே யீசானத்திற்
செப்பமாய் வயிரவர்க்குப் பூசைபண்ணு
செய்யடா மணம்மறைவில் முப்பதெருவாலே
திடமாகப் புடம்போடு மயில்கழுத்தாம்வண்ணஞ்
செய்யடா குசமனுகங் கெந்திகூட்டித்
தீர்க்கமுடன் பொற்றலையின் சாற்றூட்டி
செய்யடா குக்குடமாய் முன்போற்போட்டுத்
திடமாகுஞ் செய்செந்தூரந் தான்காணே. 225

செந்தூர மாகுமடா பொற்றலையின்சாற்றால்
திரும்பியொரு போதரைத்ததுப் புடத்தைப்போடு
செந்தூரங் கருஞ்சிவப்பா மப்பாகேளு
தேனோடு செந்தூரங் குன்றிகொள்ளு
செந்தூர மிர்தசக் கரையிற்கொண்டால்
தேகத்தில் வெட்டைசூரஞ் சோப்போகுஞ்

செந்தூர மண்டலமே தின்றாயானால்
சிரதோஷஞ் சலதோஷங் கபாலவாய்வே. 226
வாயுவினால் வந்ததொரு மேகசூலை
வலிகுன்மங் காமாலை சோகைபாண்டு
கேயமுட னுந்திக்குள் சுரமும்போகும்
நெஞ்சுவலி தண்டெரிவு பிறநீர்க்கண்டு
யாயுமே நாதவிந்து விழுங்கும்வாய்வு
அப்பனே புழுவெட்டு விழியில்ரோகம்
சாயுமே நோய்களெல்லா மிருபிடங்களற்றுத்
தவறுண்டு போகுமடா சகலநோவே. 227
சகலமாம் நோயெல்லாந் தீர்ந்துபோகுஞ்
சாற்றுகிறேன் புலஸ்தியனே தப்பாதையா
சுகமான கெந்தியது பலந்தானென்று
சுட்டதிலே யயப்பொடிதான் பலந்தானென்று
புகலாதே பழச்சாற்றா லரைத்துச்சாமம்
பூட்டியறை வெள்ளெருக்கம் பாலினாலே
வகையாக விருசாம மாட்டிவில்லை
வளமாக ரவிமுகத்தி லுலர்த்திடாயே. 228
உலர்ந்தபின்பு முப்பதெருப் புடத்தைப்போடு
உத்தமனே யனுபானங் கண்டுகொள்ளு
அலர்ந்ததொரு நோயெல்லாம் பின்வாங்கிப்போகும்
அப்பனே காந்தமது பலந்தானென்று
பலன்பெறவே கெந்தியது பலந்தானென்று
பாங்கான பழச்சாற்றா லாறுசாமங்
கலந்தாட்டு வெருக்கம்பால்ரெண்டுசாமங்
கட்டுவில்லைத் தான்காய்ந்தால் புடத்தைபோடே. 229

மண்டூரச்செந்தூரம்.

போடுவாய் முப்பதெருக் குள்ளேநீதான்
பொலிவான செந்தூர மனுபானத்தில்
தேடுநீ கொள்ளப்பா ரோகமெல்லாந்தீருந்
திரமான மண்டூரங் கேளுகேளு
வாடுவா யாயிரந்தான் வருஷம்சென்ற
வற்றதொரு மண்டூரம் பலந்தானென்று
கூடுவாய் கெந்தியது பலந்தானென்று
கொட்டுவாய் சூதமொடு செவுரிதானே. 230
தானென்ற சீனமொடு தாளகந்தானென்று
சாரமொடு வெடியுப்புச் சாரங்கூட்டிக்
கானென்ற வெருக்கம்பா லதனாலாட்டிக்
கலவத்தில் சாமமொன்று பழச்சாற்றாலே

வேணென்ற சாமம்ரெண் டாட்டிவில்லை
  விளங்கவே காய்ந்தபின்பு புடத்திற்போடு
கோனென்ற குக்குடந்த சமாசமயமுன்போல்
  குறிப்புடனே யரைத்தரைத்துப் புடத்திற்போடே. 231
புடந்தசந்தா னனபின்பு மண்ரேந்தான்
  பிலத்ததொரு செந்தூர மாகும்பாரு
திடம்படவே யனுபான மறிந்துசெய்தால்
  தேகத்திற் பாண்டுவெல்லாந் தீர்ந்துபோகும்
கடம்புரிந்த லிங்கமனே இலையுங்கல்னர்
  ராசவர்த்தங் கெவுரிமிரு தாரசிங்கி
விடம்புரிந்த வெள்ளையொடு தாளகந்தான்
  பீரவே வகையொன்று பலந்தானென்றே. 232

நவலோக செந்தூரம்..

பலமான தெல்லாந்தான் சமனுய்ச்சூதம்
  பாங்கான வைங்கோல நெய்விட்டாட்டி
பிலமாக விருசாம மரைத்துக்கொண்டு
  பிசகாம லிரவியக்கினி பதங்கமேற்றக்
குலமான நவலோக மெல்லாஞ்சாகுங்
  கூறவே பதங்கமது பலந்தானென்று
நலமாக மூசையிலே யுருக்கும்போது
  நல்லவெள்ளிப் பலமொன்று உருக்கித்தீரே. 233
உருகியதோர் வெள்ளியது கலவத்திட்டு
  உத்தமனே ரெண்டுபலம் வீரங்கூட்டி
பெருக்கவே மூலைப்பாலா லாட்டுஆட்டு
  பேசாமல் மூன்றுநாள் பனியிற்போடு
கருவான் கெந்தகந்தான் பலம்நாவிட்டு
  கட்டான பொற்றலையின் சாற்றாலாட்டு
உருவான குப்பியிலே வாலுகேந்திரம்
  ஓகோகோ துடியான செந்தூரந்தானே. 234
தானென்ற வெங்கலந்தா னிந்தவிதம்
  சாற்றடா செந்தூரந் தானேயாகும்
கானென்ற நாகமொடு நவலோகந்தான்
  கருநாகம் பித்தளைதாம் பிரத்தினேடு
ஏனென்ற வேமமொடு நவலோகந்தான்
  என்னசொல்வேன் முன்போலே யிடைதப்பாமல்
வானென்ற செந்தூரம் வெவ்வேறேயாகும்
  மளவற்ற நோய்களெல்லா மகன்றுபோமே. 235
போமப்பா நவலோகசெந் தூரங்கண்டாற்
  பொதியான கன்மாந்திர நோய்களெல்லாம்

ஆமப்பா மண்டூரம் போலேயல்லா
வப்பனே நவலோக செந்தூரஞ்செய்
யேமப்பா கைமுறைகள் தப்பாமல்செய்
எடுத்ததொரு செந்தூர மெல்லாமாகும்
நாமப்பா நவரதின மிந்தவீதம்
நாட்டினு லொன்பதுஞ்செந் தூரந்தானே. 236

ராஜபூபதி.

தானென்ற சர்வமகா வீரசூர
சங்கார ராஜபூ பதியைக்கேளு
ஏனென்று பூபதிப்பேர் கேட்குமுன்னே
யேமதூதன் காதவழிக் கப்பால்செல்வார்
வானென்ற நவலோக செந்தூரந்தான்
வகையான நவரத்தின செந்தூரந்தான்
ஏனென்ற வகையொன்று பலமொன்றுக்கு
இடைகள்தவ ருதபடி தூக்குதூக்கே. 237

தூக்கப்பா பலமொன்று சூதபற்பம்
தூரிசிசென் தூரமது பலந்தானென்று
வாக்கப்பா மண்டூரம் பலந்தனேன்று
வாகான காந்தமது பலந்தானென்று
நோக்கப்பா கெந்திபற்பம் பலந்தானென்று
நோவதனைத் தீர்க்கின்ற தாம்பிரந்தான்
தாக்கப்பா திறிகடுகு பலமொன்றேமஞ்
சாதிக்காய் வாய்விளங்கங் கிறும்புகூட்டே. 238

கூட்டுவாய் அதிவிடையம் நறுக்குமூலங்
குங்குமப்பூ கஸ்தூரி வீரம்பூரம்
நாடுவாய் கோரோசனை சிவதைகூடன்
ராசவர்த்த மஞ்சனக்கல் பின்கடுக்காய்
சூட்டுவாய் தாணிக்காய் நெறிவிடம்பாஷாணங்
துத்தமொடு கருநாபி கெவுரிலிங்கம்
மாடுவாய் வகையொன்று பலங்கால்வீத
மைந்தனே மருந்தெல்லாங் கல்வஞ்சேரே. 239

சேரவே ஒன்றுக்கி யரைக்கச்சொல்வேன்
செம்முள்ளித் தோடைவளி கரியான்கொன்றை
யாரையொடு வல்லாரை வெண்கொளுஞ்சி
யாவாரை முருக்கம்பூச் செம்பரத்தம்பூப்
பாரமெனுங் கற்றாழம் பழத்தின்சாறு
பாங்கான பொற்றலையின் பொன்னூமத்தை
வாரமுடன் வகையொன்றாய் நாளொன்றாக
வணங்கவே யரைத்திடுவாய் சாற்றினாலே. 240

சாற்றிலே யரைத்துச்சிறு பயறுமட்டாய்த்
தவறாமல் உண்டைசெய்து ரவியிற்போடு
கூற்றுவனார் தேசம்விட்டு தேசம்போவார்
கூறான பூபதிதான் காயக்கண்டு
தேற்றுவார் மானிடர்கள் தேசத்துள்ளே
தேகமினிப் பிலத்துதென்பார் திடங்கொண்டேதான்
மாற்றினால் வியாதியெல்லாஞ் சித்தரப்பா
மகத்தான பூபதியை வணங்கிச்செய்யே. 241

## நாகபற்பம்.

வணங்கியே புலஸ்தியனே அய்யாகேளு
வளமான நாகபற்ப மாகச்சொல்வேன்
இணங்காத நாகமது பலந்தானொன்று
இந்திடைக்குச் சீலையிட்டுக் கொளுஞ்சிவோரல்
குணங்காமற் கிண்டிவரப் பற்பமாகுங
கூறக்கேள் பின்னெடுத்துக் கலவத்திட்டு
மணம்பெறவே பழச்சாற்றா லுசாம
மயங்கவே யரைக்கயிலே மருந்துபோடே. 242

மருந்தென்ன வீரமொரு பலத்தைப்போடு
வாகான லிங்கமொரு பலந்தான்போடு
பொருந்தவே சூதமரைப் பலந்தான்வாரு
புகழாக வில்லைசெய்து ரவியிற்போடு
திருந்தவே யஞ்செருவிற் புடத்தைப்போடு
திரமான நாகமது செந்தூரந்தான்
அருந்தவே குன்றியிடை பனைவெல்லத்தி
லப்பனே குன்மமெல்லா மகன்றுபோமே. 243

போமடா சீதானார் கெந்திரெண்டு
புகழாக வகையொன்று பலந்தானென்று
ஆமடா பழச்சாற்றா லுசாம
மப்பனே மறுகல்வங் தன்னிற்கேளு
வேமடா வயப்பொடியுஞ் சூதஞ்சாரம்
வெவ்வேறு பலமொன்று விளங்கவேதா
னமடா னவிலொன்று சாமமாட்டு
நன்றிகல்வத் திட்டமருந் தொன்றாய்ச்சேரே. 244

ஒன்றாக்கிப் பொற்றலையின் சாற்றாலாட்டு
உத்தமனே யறுசாம மரைத்தபின்பு
நன்றான மத்தெருவிற் புடத்தைப்போடு
ரசகெந்த சாரமா விடைபோகாது
சென்றாடு செந்தூர மென்னசொல்வேன்
சீராகக் குன்றியிடை தேனிற்கொள்ளு

குன்றாத குன்மமெட்டு பீலிகையினோடு
கொழுத்தமகோ தரந்தீரும் கூறினேனே. 245
கூறினேன் சலாசத்துச் செந்தூரத்தைக்
குன்றியிதில் தேனோடே கூட்டிக்கொள்ள
கூறினே னீராம்பல் சோகைதாகங்
கொண்டசலக் கழிச்சலொடு யீளைரோகங்
கூறினே னீர்க்கடுப்புக் கல்லடைப்பு
கொத்தமல்லி சீரகத்திற் கொண்டாற்கேளு
கூறினேன் பித்தங்கள்காற் பதுமேதீரும்
கொள்பிறநீர்க் கோவைகுட்டம் பதினெட்டோடே. 246
பதினெட்டு குட்டமொடு குறைநோயெல்லாம்
பறக்குமடா செந்தூர மூச்சுப்பட்டாற்
கெதிகெட்டோ மென்றோடும் வாதமெல்லாங்
கெஞ்சவே தானடிக்கு நறுக்குமூலம்
மதிகெட்டே னென்னாதே புலஸ்தியனே அய்யா
வாய்விளங்கந் திரிகடுகு வோமங்காயம்
அதிவிடைய மெவாச்சாரம் பனைவெல்லந்தா
னப்பனே வகையொன்று பலந்தானொன்றே. 247
பலமோடு சாரணைவேர் மருந்தோடெல்லாம்
பரிவாகச் சூரணித்துப் பாங்குகேளு
கலங்கவே திருமேனி இறுபுட்காலுங்
கரியானும் வெவ்வேறே யுலர்த்தித்தூளாய்
மலங்காமல் சூரணித்துப் படிகாலப்பா
மருந்தோடே சேகரித்து நறுந்தேன்விட்டே
இலங்கவே யொருபோது கழஞ்சியுண்ண
வேகுமடா சிலேஷ்பனங்கள் தொண்ணூற்றாறே. 248
தொண்ணூற்றா றாஞ்சடலத் தத்துவந்தான்
சித்தியாந் தோஷமெல்லாஞ் சொக்கியோடுங்
கண்ணுற்ற நாடியெல்லாம் பிலக்குஞ்சொன்னேன்
கைகண்ட பூநீறு கருவாய்ச்செய்தால்
எண்ணமாய்ச் செந்தூர மினத்துக்கெல்லா
மிடுவதொரு பலத்துக்குக் கழஞ்சிவீத
முண்ணவே செந்தூரம் பண்ணினாக்கா
லுறுதியா மில்லாவிட்டா லுலகம்பொய்யே. 249
பொய்யென்று வுலகந்தான் வேதாந்தத்தைப்
பூட்டாமற் சித்தாந்தம் புக்கிக்கெட்டாற்
பொய்யென்பான் கருவறியான் செந்தூரஞ்செய்யப்
போக்கறியா னுலகத்தா னிடைபோச்சென்பான்
பொய்யென்பா னவன்வாயில் மண்ணையள்ளிப்
போடுநீ பாப்பாசி கொண்டுசெண்ணு

பொய்யென்பா னவன்தன்னை முன்னேவைத்துப்
பூட்டுவாய் செந்தூரம் பூரணிச்செய்யே. 250

சரக்குகள் சுத்தி.

செய்யப்பா கைமுறையாய்ச் செய்துகாட்டு
செய்தொழிலைப் பாகமாய் செய்யச்சொல்லு
வையப்பா சரக்கெல்லாஞ் சுத்திசெய்து
மாட்டப்பா சுத்திக்கு வகையேகேளு
பொய்யப்பா சொல்லவில்லை மேனிச்சாறு
புகழாக படியொன்று கற்றாழம்பால்
மெய்யப்பா படியொன்று வழுரிதானும்
விளங்கவே படியொன்று பாண்டத்துற்றே. 251

ஊற்றுவாய் பழச்சாறு படிதானென்று
உத்தமனே செம்பரத்தம் பூநீருட்டு
ஊற்றுவா யொன்றாக்கித் தம்பலச்சா
றொருபடிதான் கூட்டிவிட்டு முலைப்பால்கேளு
ஊற்றுவாய் படிகால்தான் ரெசித்தேபின்
துறப்போடு பாறையுப்பு இணங்கவோடு
தேற்றுவாய்க் காரம்பூச் சீனஞ்சாரந்
திரமாக வகையொன்று பலந்தான்காலே. 252

காலாகப் பொடிசெய்து போட்டுக்கிண்டி
காற்றுடா மூலையிலே கட்டாய்வைத்து
மேலான பாஷாணம் லோகத்தோடு
வேண்டியதோர் சரக்கெல்லாங் கிழியாய்க்கட்டிச்
சேலான வூன்லவிடும் பக்கஞ்சென்றால்
திருப்பவே ஒருமாத்தைக் காடிக்குள்ளே
மாலாகப் போட்டுறே மூன்றுநாள்வை
மகத்தான சுத்தியதாம் வயித்தியம்பாரே. 253

பாரப்பா விப்படியே சரக்குசுத்தி
பாங்காகச் செய்தாக்கால் சரக்கெல்லாந்தான்
காரப்பா வோடாது கடுந்தியாலே
கட்டாகச் சுத்திசெய்து செந்தூரஞ்செய்
யேரப்பா வயித்தியத்திற் சோம்பலாகா
என்னைப்போற் சுத்திவகை யாருஞ்சொல்லா
ராசப்ப புலத்தியனே உனக்கிட்டேய்யா
வறுபத்து நாலுமிந்தச் சுத்திபண்ணே. 254

பண்ணடா காந்தமது பலந்தானென்று
பாங்கான செவுரியோடு பலந்தானென்று
கண்ணடா பழச்சாற்று லுசாமங்
கட்டாக வெட்டறத்து வில்லைசெய்து

விண்ணடா குகையிலிட்டுக் காரம்போட்டு
மேலோடு மூடியே சீலைசெய்து
நண்ணடா திருத்திகொண்டு உலையிலூது
நலமான காந்தமது மணிபோலாமே. 255
மணியான காந்தமணி பலந்தானொன்று
வாகான சூதமொன்று கெந்திரெண்டு
தணியான பொற்றலையின் சாற்றாலாட்டு
தப்பாம லறுசாமம் வில்லைசெய்து
துணிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
துடிகொண்ட செந்தூர மாகப்பின்பு
வணியாக வஞ்சுதரம் பொற்றலையின்சாற்றா
லாட்டியே வில்லைசெய்து புடத்திற்போடே. 256
போடப்பா பழச்சாற்றிற் புடந்தானொன்று
புகழான காந்தமது செந்தூரந்தான்
வாடப்பா வரிதார நீறுகூட்டி
யப்பனே குன்றியிடை தேனிற்கொள்ள
வாடப்பா பிளவையொடு சூலைவாய்வு
மண்டைநோ யொடுகண்ட மாலைதிருஞ்
சாடப்பா வரையாப்புப் பவுத்திரமுந்தீருஞ்
சத்தடா சூதபற்பந் தன்னைச்சேரே. 257
சேரடா ஒன்றாக்கித் தின்றாற்கேளு
செத்துதடா லிங்கபுற்று யோனிப்புற்று
பாரடா கிரந்தியொடு இந்திரகண்டி
பறக்குமடா நோயெல்லாம் பாருபாரு
சாரடா பூநாகம் பாலில்போட்டுத்
தண்ணிவிட்டுக் கழுவிப்பாண் டத்திலிட்டு
நீரடா வற்றிடவே வறுத்துப்போடு
நேசமாம் பொன்னிறமபோற் பதத்தைக்காணே. 258
காணப்பா பூநாகம் சூரணித்துக்
கட்டாகத் திப்பிலியும் சூரணித்து
ஊணப்பா ரெண்டுமொன்றாய் சேர்த்துக்கொண்டு
உத்தமனே நறுந்தேனிற் காசிடைதானிட்டுப்
பேணப்பா பற்பமது குன்றுகூட்டிப்
பிலப்படவே மூன்றுநாள் கொள்ளும்போது
தோணப்பா நோய்முன்னா லெடுத்துநீராந்
தோன்றிவந்த க்ஷயமெல்லாம் சுழன்றுபோமே. 259
சுழன்றுதடா வப்பிரக பற்பத்தாலுந்
துடியான சொர்ணத்தின் பற்பத்தாலுஞ்
சுழன்றுதடா தீராத க்ஷயங்களெல்லாங்
காடுறைந்து போச்சுதடா தங்கத்தாலே

யுழன்றுவரும் நோயெல்லாம் ஒழிந்துபோகு
முலைமுகத்திற் றரும்பையிட்ட வாறதொக்குந்
தழன்றுதடா நீர்வற்றிச் சயமேதீருஞ்
சாற்றுகிறேன் வாதத்தின் தயிலங்கேளே. 260

வாதத்தின் தயிலம்.

கேளப்பா வேப்பெண்ணை படிதானாலு
கெடியான வாறுதிங்கள் காடிபடிநாலு
வாளப்பா பழச்சாறு படிதான்ரெண்டு
மகத்தான குமரிச்சார் படிதானொன்று
வேளப்பா மயிலிறகு பலந்தானொன்று
வெள்ளைச்சா ரணையின்வேர் பலந்தானொன்று
நாளப்பா வச்சிரவல்லிவேர் பலந்தானொன்று
நாறியதோர் காந்தைச்சாற் றரைத்துப்போடே. 261

போடப்பா வேப்பெண்ணைக் குள்ளேநீதான்
புகழ்தேவ தாரமொடு நறுக்குமூலம்
நாடப்பா திரிகடுகு வோமங்காயம்
நலமாக வகையொன்று பலமுங்கால்தான்
சூடப்பா முலைப்பாவி லரைத்துப்போட்டு
சுத்தகம லக்கினியாய்த் தீயைமூட்டு
தேடப்பா பதம்பார்த்து வடிவேபெண்ணை
செகமெல்லா மெய்த்தநறு நெய்யாங்காணே. 262

நறுநெய்தான் படிநாலுக் கொன்றுய்ச்சேரு
நலமான தயிலமிது இதுக்குள்கேளு
வுறுவேம்பின் பட்டையுட தயிலந்தானு
முத்தமனே நாலுக்கொன் றுகச்சேரு
நிறுவிகற்பத் தோஷமெல்லாம் நீங்கிப்போகும்
நினைவாகக் கண்டத்தின் நோயெல்லாந்தான்
அறுதியாய்ப் பூசையிலே வாதமெண்பதோடு
மப்பனே முடங்கினகால் தேறும்பாரே. 263

தேறுமடா காசிடைதான் தயிலந்தன்னில்
தேனுமொரு காசிடைதான் கூடக்கூட்டி
யாறுமடா சீனிவேரு கடிதான்கூட்டி
யப்பிரக செந்தூரங் குன்றிகூட்டி
யூறுமடா மூன்றுநாள் கொள்ளும்போது
உத்தமனே வாதமெல்லா மொழிந்துபோகு
மாறுமடா இதைவிட்டுத் தயிலந்தன்னில்
மால்தேவி பற்பமொடு சூதங்கூட்டே. 264

சூதபற்பந் தன்னுடனே மண்டலமெகொள்ளு
அடியான பதினெட்டுக் குட்டம்போகும்

வாதத்திற் பித்தநீர் தானுமேகும்
மயங்காதே சுறுக்கிதடா வேப்பெண்ணைக்குள்
ளாதிமுன்பே யிருந்தகைப்பும் போக்கினவாரு
வதினுடைய வாசத்தைத் தீர்க்கிறவாரு
வேதாந்தப் புலஸ்தியனே உனக்காய்ச்சொன்னேன்
மீறுகற்ப தோஷமெல்லா முழலாய்ப்போமே. 265

சவுரித்தயிலம்.

போமப்பா குட்டங்கள் வாதம்போகப்
புகழாகச் சொல்லுகிறேன் புலஸ்தியனே
காமப்பா சவுரியது பலந்தானூறு
நாட்டினேன் கெந்தியது பலந்தான்பத்து
ஓமப்பா காட்டுள்ளிக் கிழங்குபத்து
உத்தமனே வெள்ளாட்டுப் புழுக்கைபத்து
வேமப்பா கார்த்திகையின் கிழங்குபத்து
வெள்ளச்சாரணையின்வேர் பலந்தான்பத்தே. 266

பத்தப்பா பிரம்பினுட கிழங்குபத்து
பாங்காக ஒன்றாக்கிப் பூத்தயிலம்வாங்கிச்
செத்தப்பா போனபிணந் திரும்பிப்பேசும்
திரமான குருநீற்றின் செய்கையாலே
மெத்தப்பா வோடாதே குருவைநீயு
மீருகின்ற தயிலங்கள் வடிக்கும்போது
ஒத்தப்பா சொல்லுகிறே னூற்றுக்கொன்று
வூட்டினால் தயிலமது உறுதியாமே. 267

உறுதியாம் தயிலமது மேலுக்குப்பூசி
வொருபோதும் வாதமெல்லா மோடிப்போகு
முறுதியாய் சூதபற்பம் தாம்பிரபற்பம்
உத்தமனே தயிலந்தேன் சீனிகூட்டி
வுறுதியாய் மண்டலமே கொண்டபோது
ஓடுமே வண்டுகடி குட்டமெல்லா
முறுதியா யிருந்தகடி பெலிகடிநீர்ப்புண்கள்
ஓகோகோ தீருமடா வுண்மைதானே. 268

உண்மைதா னெள்ளெண்ணெ படிதானெட்டு
உத்தமனே வேப்பெண்ணெ படிதானொன்று
உண்மையா யோண்டத் தெண்ணெபடிரெண்டு
உருமையுள்ள தேங்காய்நெய் படிதானொன்று
உண்மையாய் கொப்பரைக்குள் ளொன்றாய்வார்த்து
உமுரிச்சா றொருபடிதான் கூடவிட்டு
உண்மையாய் சந்தனத்தூள் பலந்தானஞ்சு
உயர்தேவ தாரமது பலந்தானென்றே. 269

ஒன்றாக வெண்ணெய்க்குள் கலந்துபோடு
ஓமம்சீர கம்மதூரம் நறுக்குமூலம்
நன்றாக திரிகடுகு கொத்தமல்லி
நாகப்பூ செண்பகப்பூ காமப்பூவும்
வொன்றாகப் பச்சையொடு பேய்ப்புடல்பேய்ப்பீர்க்கு
விளங்கவே வகையொன்று பலமுங்கால்தான்
சென்றாட்டு பழச்சாற்றா லரைத்துப்போடு
சேரவே மெழுகுபத மாகக்காச்சே. 270
காச்சவே யாவின்பால் படிதான்ரெண்டு
கரிசாலைச் சாருமொரு படிதான்விட்டுப்
பாச்சிடவே செவ்விளநீர் படிதானாலு
பழச்சாறு படியொன்று நொச்சிச்சாறு
வாச்சுதே படியொன்று மேனிச்சாறு
மறுபடியும் செருப்படிச் சாறுபடியொன்று
தாச்சியே படியொன்று நெல்லிச்சாறு
தப்பாமல் கூட்டியே வடித்திடாயே. 271
வடித்திடுவா யெண்ணை தனைக் கலசத்துள்ளே
வாகாகக் கற்பூரம் சவ்வாதுகூட்டி
பொடித்திடுவா யாவின்கோரோசனை கஸ்தூரி
புகழான குங்குமப்பூ வகையொன்றுக்கு
முடித்திடுவாய் கழஞ்சியொன்று எண்ணைவாச
முகத்திலே பட்டவுடன் வாசமீறி
நொடிங்குமூன்னே சர்வாங்க நோய்கள்போகும்
நொய்தான வாசவெண்ணை தயிலந்தானே. 272
தானென்ற நோயெல்லா மொழிந்துபோகும்
தற்பரமாம் பூநீறுவடி கலசத்துள்ளே
வேனென்ற காசிடைதான் போட்டதாலே
விதமப்பா இந்தவெண்ணெய் சித்தர்க்காகும்
பாயென்றால் பாயுமடா நோயைச்சொல்லப்
பறந்துபோய் வெட்டுமடா கபாலவாய்வைத்
தாயென்று விந்தவெண்ணெய்ச் சர்வாங்கம்பூசித்
தலையிலே தேய்த்தவுடன் முழுகுவாயே. 273
முழுகிவருஞ் சித்தருக்குச் சொல்லக்கேளு
மெய்யெல்லாம் லெட்சுமியின் காந்தியாகும்
உழுகவே வெண்ணையிது கபாலந்தேய்க்கி
லுத்தமனே பசும்பயறு சீயக்காயாம்
நழுகாத தசையினுள்ளே தோஷம்போகும்
நன்றாகத் தேகத்தில் வலியோ இல்லை
விழுகுதடா நோயெல்லாம் நமனும்வாரான்
மெய்பொய்யா வென்றவனை மிதியடியால்சாடே. 274

சாடப்பா லோகத்தில் பசாசுதன்னைச்
சாதிக்க மாட்டாத லோகத்தோரைச்
சாடப்பா சித்தாந்தக் கிரிகையோரைத்
தள்ளடா புழுக்குழியில் சண்டாளரைத்தான்
சாடப்பா மாய்கைகொண்ட உலுத்தரைத்தான்
சாராதவேதாந்தந் தட்டினேரை
சாடப்பா பூரணத்தி னேக்கங்காட்டிச்
சண்ணடா ஞானவாள் கொண்டுவெட்டே. 275

வெட்டென்று சொன்னீரே குருவேஐயா
மேதினியோர் சித்தாந்த விளக்கமல்லோ
வெட்டென்று சொன்னீரெ லோகத்தோரை
வேதாந்தந் தானுரைக்கச் சித்தாய்ப்போமே
வெட்டென்று சொன்னது தா னெவரைமைந்தா
வேதாந்தந் தனைப்புகழ்ந்து மதியாதாரை
வெட்டென்றே னவனுடைய பாவந்திர
வெகுசுறுக்காம் புலத்தியனே விள்ளக்கேளே. 276

நீற்றினத்திராவகம்.

விள்ளக்கேள் நாயுருவி தாழையுப்பு
மேனியுப்பு வேதையுப்பு வாடையுப்பு
விள்ளக்கேள் தேனுப்பு வெள்ளெருக்கினுப்பு
விடமான வழுரியுப்பு கள்ளியுப்பு
விள்ளக்கேள் வெடியுப்பு பலமோபத்து
விதமான சினமொன்று சவுட்டுப்போடு
விள்ளக்கேள் பலமொன்று வகைதானப்பா
வெண்காரப் பலமிரண்டு கல்லுப்பொன்றே. 277

ஒன்றான பூநீறு சாரஞ்சூடன்
ஓகோகோ துரிசுஅனன பேதிவெள்ளை
நன்றாக வகைக்கரைப் பலமேகூட்டு
நாடேறி கிளிஞ்சியது சுத்திபண்ணி
வென்றதொரு சிப்பியது பலமுங்கால்தான்
விசையடங்கக் கலவத்திற் பொடித்தொன்றாக்கி
சென்றுடுவ் குப்பியிலே தீநீர்வாங்கு
சித்தர்மெய்த்த நீரப்பா செப்பொணுதே. 278

ஒன்றான நீறலே தங்கம்நீறும்
உத்தமனே வெள்ளிமுதல் வங்கநீறும்
நன்றான நாகமுதல் லோகம்நீறும்
ரசமோடு காந்தம்பல கரையும்நீறும்
புன்றான நவரத்தினம் வெவ்வேறேநீறும்
பாஷாணச் சாக்கெல்லாம் படுமுன்னீறுக்

தன்றான வுபசாங்கள் தானேநீறுந்
 தருகற்பத்தால் வருநோய் தள்ளக்கேளே. 279
கேளடா சுலபமிது தீரென்றால்
 . கேட்கும்டா சாக்கெல்லாஞ் செந்தூரந்தான்
நாளடா பிலத்திருந்த தேதுவென்று
 நாடிப்பா ரிதனாலே சத்துத்தானும்
வேளடா விந்நீரை முன்னீர்செய்து
 வேண்டியதோர் செந்தூரஞ் சொன்னதெல்லா
மாளடா சத்துவகைத் தங்கங்கூட்டி
 அப்பனே அறிவறிந்து பற்பஞ்செய்யே. 280
செய்யடா குருநீறுஞ் செயநீறுஞ்சொன்னேன்
 திரமானபூவினிட குருநீறுஞ் சொன்னேன்
செய்யடா தலைமுழுக்குத் தயிலஞ்சொன்னேன்
 செந்தூர வகைமுறைகள் சேரச்சொன்னேன்
செய்யடா வாதததின் குருவுஞ்சொன்னேன்
 தெளிவான லேகியங்கள் கிருதஞ்சொன்னேன்
செய்யடா வாதிமான் கற்பங்கொண்டால்
 தேகமடா வயித்தியத்திற் றிறவுகோலே. 281
திறவுகோல் கைக்கொடுத்தே னறிவுள்ளோர்க்கே
 தேசத்தோர் வயித்தியத்தில் திரம்போதாது
பிறவாத நெறியோர்க்கு வயித்தியமுஞ்சொன்னேன்
 பிறந்திறக்கும் பாவிகட்கோ வெளிவிட்டேனான்
அறமான வாதிமகன் மனந்தெளிந்து
 ஆசைவைக்கப் பேரின்பத் தடுத்தோனாகி
உறவாகப் பலஸ்தியனே புத்திசொல்லி
 யுரைத்திடுவாய் கற்பகந்தான் யோகத்தோர்க்கே. 282
யோகமெல்லாம் ஞானத்துக் காதிபீடம்
 யோகத்துக் காதியடா கிரிகையாகும்
வாகான கிரிகைக்குச் சரிதைமூலம்
 வளமான சரிதையென்ன வென்றுகேளு
தாகான குண்டலியி னுதமாவீசன்
 சகலருக்குஞ் சரிதைமுறை தப்பாவண்ணம்
ஏகமாய்க் கீழ்முக்கோ ணத்துள்ளாகி
 யிருந்தவிட மறியார்க ளூலுத்தர்தானே. 283
தானென்ற சரிதைவிட்டுக் கிரிகையென்ன
 சாற்றக்கேள் புலஸ்தியனே மூலந்தன்னில்
தானென்ற குண்டலிக்குள் சத்திதன்னைத்
 தாயென்றே பூசித்தால் கிரிகையாகும்
தானென்ற யோகந்தா னென்னவென்றால்
 தப்பாத நந்தியுட மூலந்தன்னில்

தானென்ற மனக்கூடி வாசிபார்க்கில்
சதாசிவனும் யோகத்தைத் தாக்கிப்பாரே. 284
பாரப்பா வாசியினால் யோகமாச்சு
பரிவான ஞானமென்ன வென்றுகேளு
நேரப்பா தன்னையறிந் துண்மைகண்டு
நிலையான தலைவனாய் பாதத்திற்சேர்ந்து
ஆரப்பா வறிவாலே பூரணத்தைக்கண்டு
வம்பலத்தே நடப்புரிந்தால் ஞானமாகும்
போப்பா விதுவல்லோ சாலோகசாமீபம்
பெருத்த சாரூப சாயுச்சியமாச்சே. 285
ஆச்சடா மனம்புத்தி ஆங்காரந்தான்
அரகரா சித்தத்தி லடங்கியேதான்
போச்சடா தீட்சைவிதிக் குள்ளேபுக்கிப்
புதல்வனே புலஸ்தியனே யென்னசொல்வேன்
நீச்சடா ஞானமென்ன வாய்ப்பேச்சாலே
நிலைக்குமோ சித்தாந்த நெறிகொண்டோர்க்கு
மூசசடா ஓடுவது மொடுங்குவதுங்காணான்
முனையறியா முழுமாடு னுத்தர்காணே. 286
காணப்பா சண்டாள பீசத்தேதான்
கனிவாகச் செனித்ததொரு பாவியோர்க்குத்
தோணவே வேதாந்தஞ் சொன்னாலுந்தான்
சூட்சத்தைப் பார்த்தறியான் மாய்கைமூடி
ஆணவமாய்க் கழிவதல்லால் வேறொன்றில்லை
யாசைகொண்டு பேச்சுரைப்பார் கழுதைமாண்பர்
வீணன பிள்ளைகளைச் சேர்க்கவேண்டாம்
விட்டகுறை யுண்டானால் வருவான்பின்னே. 287
வருகாது ஒருநாளுஞ் சொன்னாலுந்தான்
வாய்க்குமோ விட்டகுறை யில்லாவிட்டால்
உருகாது ஞானத்தி னுண்மையாகி
உத்தமனே மனம்வேறு யோடிப்போகும்
பெருகாது வேதாந்தஞ்சித் தாந்தத்துள்ளாய்
பேய்மக்க ளிறந்தார்பூ ரணநோக்காமல்
அரிதாகும் விட்டகுறை வாய்ப்புக்கேளு
அப்பனே வாசிரெண்டா லறிந்துபாரே. 288
பாரப்பா மதியிரவி யிரண்டுக்குள்ளே
பகர்ந்தோடும் ஞானவரை சாத்தைப்பார்க்கில்
நேரப்பா யிடைகலையில் பெண்ரூபமாகும்
நெறியான பின்கலையிலாண் ரூபமாகும்
ஆரப்பா அந்திடத்திற் பஞ்சபூதம்
அசைகொண்டு வாடுமெங்கே கெடியாரந்தான்

சோப்பா நாழிகைதா னென்றேபாயும்
தெளிவான பிரிதிவியில் நூற்றிருபத்தாமே. 289
பத்தான அப்புவிலே கடிகையொன்று
பாயுமடா தேயுவிலே கெடியாரங்கள்
சித்தான தொன்றேகால் வாய்வுக்கேதான்
செப்பக்கேள் ஒன்றரைதான் கடிகையாகும்
முத்தான வாகாசத் தொன்றேமுக்கால்
முழுதுமிதிற் கடிகையா மோசமில்லை
பெற்றனுதா னிதுக்குள்ளே விட்டகுறைமார்க்கம்
பேரின்பப் பூரணசூஸ் திரத்திற்காணே. 290
காணப்பா சரிதையுட புத்திதோணுங்
கருதிப்பார் கிரிகையுட புத்திதோணும்
பூணப்பா பேரேது யோகமார்க்கம்
புத்திமா னென்பதெல்லாங் காணலாகுந்
தோணப்பா ஞானத்தின் புத்திகாணுஞ்
சொற்றிறமாய் மாத்திரையின் பிலங்கள்சொன்னேன்
பேணப்பா பூரணசூஸ் திரத்தைப்பாரு
பேயான மனந்தேறும் பிதற்றிலாதே.
பிதற்றில்லா சூத்திரமிரு நூறும்பாரு
பேசுமடா பூரணத்தி நூலைச்சொன்னேன்
பதைப்படங்கு மூலமதில் நன்றாய்ச்சொன்னேன்
பரிபாஷை யில்லையடா யானுஞ்சொன்னே
னதைத்தானே சோதிக்க சட்டமுனிநாத
னுட்டியதோர் நிகண்டினுட சூஸ்திரத்திலேதான்
விதைத்தானே மூலத்தின் கருவைக்கொட்டி
மேலாறு தாரமொடு வாசிதானே.
வாசியொடு லட்சியமுஞ் சக்கரமுஞ்சொல்லி
வாதத்தின் கருக்களையும் வளமாய்ச்சொல்லி
நேசமுட னேயுரைத்தார் ஒத்துப்பாரு
நிலையான பூரணசூஸ் திரத்திற்றோணும்
வாசமுடன் ரோமரிஷி யைம்பதுக்குள்
மகத்தான மூலத்தின் வழியேசொன்னார்
பேசிடுங்காண் மச்சமுனி நிகண்டுதீட்சை
பேரின்ப ஞானமொரு நூலாற்காணே.
நூலிலே திருமூல ரைந்நூறுக்குள்
நுழைந்தங்கே பார்த்தவர்க்கு ஞானந்தோணுங்
காலிலே கால்மூட்டிக் கண்ணைக்காட்டிக்
கருத்துறவே யோகவெளி கட்டாய்ச்சொன்னார்
சேலான வாதார மா றும்நன்றாய்
செப்பினார் வாசிவைத்துத் திறமாய்ப்பார்க்க

மாலான மாய்கைவிட்டுத் துறவிற்சென்று
வழிபாகு கண்டறிந்து குருவைப்போற்றே. 294
குருவினுட பதம்போற்றி மூலங்கேளு
குறிப்பான பூசைவிதி தன்னைக்கேளு
குருவினுட பதம்போற்றி யாதாரங்கேளு
கோலமஞ் சக்கரத்தின் குறிப்புகேளு
குருவினுட பதம்போற்றி லட்சியத்தைக்கேளு
கோலங்கள் மிகவெடுத்த ஆத்துமாக்கள்
குருவினுட பதம்போற்றித் தன்னைக்காணுங்
குண்டலியின் குறிப்பைக்கேள் முனையைக்கேளே. 295
கேளடா புலஸ்தியனே சொல்லக்கேளு
கெடியான பரங்கடந்தால் தலைவனாவான்
கேளப்பா குருவினடி தொழுதுநின்று
கெட்டியாய்ச் சிவபூசை மார்க்கந்தன்னை
கேளப்பா சொன்னார்பின் தேவிபூசை
கிருபைவைத்துச் சொன்னக்கா லறிந்துபூசி
கேளப்பா பூசைவிதி தப்பாவண்ணம்
கெட்டியாய் மவுனத்தின் கிரிகைகேளே. 296
கிரிகைவிட்டு யோகத்திற் சென்றுகூடி
கேசரியில் மனம்வைத்து மூட்டுங்காலை
அறிவான மவுனத்தே வூசியூது
அப்பாபின் சிவதீட்சை சத்திதீட்சை
பிறிவாக யிருகாலம் வைத்தவூது
போரான குளிகையிட்டுப் பேருண்டாகச்
செறிவாக மூதண்ட லேகியந்தான்கொள்ளு
திட்டமாய் வழலைதள்ளிக் கற்பங்கொள்ளே. 297
கற்பங்கள் கொளவதிலே மூலிகற்பம்
கைக்கடங்கா நோய்சளறும் காலம்பார்த்து
நிற்பமென்றே நோய்பிலக்கும் நோய்கட்கெல்லாம்
நெஞ்சிலே கூட்டுதற்கு வயித்தியஞ்சொன்னேன்
அற்பமென்று சொன்னக்கா லெல்லாமபாழாம்
அறிவோடே கற்பமது கொள்ளும்போது
உற்பனமா யுறுதிதருஞ் செந்தூரங்கள்தா
னுற்றதொரு லேகியங்கள் கிருதஞ்செய்யே. 398
செய்யப்பா தயிலங்கள் சூரணங்கள்
செயமான பூபதிகள் கற்பத்தோடு
செய்யப்பா கற்பதனைக் கொள்ளுமுன்பே
திரமாகச் செய்துவைப்பாய் தவறாவண்ணம்
செய்யப்பா வயித்தியத்தி லாயிரத்துக்கொன்றாய்
செப்பினேன் வயித்தியம் யென்னசொல்வேன்

கையைப்பார் முகத்தைப்பார் தசநாடியைப்பார்
கருச்சொன்னேன் பதினுயிரத் திற்காணே. 299
காணப்பா பார்த்துணர்ந்த வாதிமகனுனுற்
கைவண்ணங் தப்பாமல் வயித்தியஞ்செய்வாய்
தோணப்பா வடுகனுட பூசைசெய்வாய்
சொற்குருவை மறவாதே லட்சியத்தினுள்ளே
பேணப்பா நந்திகுரு உபதேசத்தாற்
பேசாதே சூட்சமாய் பேணிப்பாரு
ஆணவத்தை விட்டல்லோ கற்பங்கொண்டால்
ஆகாகா சங்கென்று மூலங்காணே. 300
மூலத்தி னெழுத்தாலே மவுனங்கொண்டு
மூட்டினுல் வடுகனங்கே நிருத்தஞ்செய்வான்
ஆலத்தின் குண்டலிக்கு ளடுக்கப்பாரு
ஆசையவன் வைப்பதற்கு வடமாலைசாத்து
சீலத்தி னந்தியுட பூசைபண்ணு
செயகண்டி நாதவாலி மணியினேசை
காலத்தின் கருவறிந்து பூசைசெய்தால்
கைக்குள்ளாம் வயித்தியமுந் நூறுமுற்றே. 301

செந்தூரமுந்நூறு - முற்றிற்று-

## செந்தூரம் முந்நூற்றின் அட்டவணை.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| அண்டச்சத்து | 20 | நாகசெந்தூரம் | 46 |
| அப்பிரகசத்து | 12 | நாகபற்பம் | 60 |
| அயக்காந்தச்செந்தூரம் | 29 | நிமிளை | 14 |
| அயக்காந்தச்செந்தூரம் | 36 | நிமிளைச்செந்தூரம் | 15 |
| அயச்செந்தூரம் | 28 | நீற்றின திராவகம் | 67 |
| ஆனந்தவயிரவன் | 52 | பவளவங்கச்செந்தூரம் | 27 |
| கற்பூரசலாசத்து | 11 | பாண்டுலேகியம் | 29 |
| கிளிஞ்சிற்சுன்னம் | 40 | மண்டூரச்செந்தூரம் | 30 |
| சாக்குகள் சுத்தி | 62 | மண்டூரச்செந்தூரம் | 57 |
| சவுரித்தயிலம் | 65 | முத்துச்செந்தூரம் | 32 |
| சுயமக்கினிகுமாரம் | 51 | ராஜபூபதி | 59 |
| சூதபற்பம் | 17 | வங்கச்செந்தூரம் | 48 |
| சூதபற்பம் | 53 | வயித்தியமுறைமை | 39 |
| தாளகநீறு | 17 | வயிரபற்பம் | 54 |
| தாளகச்செந்தூரம் | 33 | வாதத்தின் தயிலம் | 64 |
| துரிசிசெந்தூரம் | 23 | வெண்கலச்செந்தூரம் | 32 |
| துளசிலேகியம் | 45 | வெள்ளீயச்செந்தூரம் | 37 |
| நவசிந்தாமணி | 36 | வெள்வங்கச்செந்தூரம் | 49 |
| நவலோகசெந்தூரம் | 58 | க்ஷயரோகத்துக்குலேகியம் | 21 |


பாலகுமான் அச்சியந்திரசாலை, வியாசர்பாடி, சென்னை.